BHOOTHA KANNADI Tamil Monthly

# பூத கண்ணாடி

மலர் 8 | இதழ் 7 | ஜூலை 2026 | புலனாய்வு தமிழ் மாத இதழ் | விலை ரூ.10/-



# மாறிய அரசியல் திசைவழி: தவெகவின் புதிய பாய்ச்சல்!

## அரசு அலட்சியத்தால் சிதைந்த இளைஞர்களின் அரசுப் பணி கனவு!



# வேலூர் மாவட்டத்தின் புதிய நம்பிக்கை!

## ஆட்சியர் பி.எஸ்.லீலா அலெக்ஸ் IAS



வேலூர் மாவட்டத்தின் தற்போதைய மாவட்ட ஆட்சித் தலைவராக திருமதி பி.எஸ். லீலா அலெக்ஸ், இ.ஆ.ப. அவர்கள் பொறுப்பேற்றுத் தனது மக்கள் பணியைத் திறம்பட முன்னெடுத்து வருகிறார். தமிழ்நாடு சிவில் சர்வீஸ் (SCS) துறையிலிருந்து தனது திறமையான செயல்பாடுகளின் மூலம் இந்திய ஆட்சிப் பணிக்கு (I.A.S) தகுதி உயர்த்தப்பட்டவர்.

அரசு நிர்வாகத்தில் பல்வேறு பொறுப்புகளைத் தாங்கி, தற்போது வரலாற்றுச் சிறப்புமிக்க வேலூர் மாவட்டத்தின் புதிய ஆட்சித் தலைவராக 2026 மே 31 அன்று முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

திருமதி பி.எஸ். லீலா அலெக்ஸ் அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். அரசு அதிகாரியாகப் பொறுப்பேற்றது முதல் பொது வாழ்விலும், கள அளவிலான நிர்வாகப் பணிகளிலும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகிறார்.

லீலா அலெக்ஸ் அவர்கள் ஒரு பொறியியல் பட்டதாரி (B.E.) ஆவார். இவருடைய தொழில்நுட்பக் கல்வி அறிவுதான், தற்போதைய நவீன உலகிற்கு ஏற்ப மாவட்ட நிர்வாகத்தில் புதிய டிஜிட்டல் உத்திகளைப் புகுத்த இவருக்குப் பெரும் உந்துதலாக அமைந்துள்ளது. ஐ.ஏ.எஸ் அதிகாரியாகப் பதவி உயர்வு பெறுவதற்கு முன்பும், பின்பும் தமிழ்நாடு அரசின் பல்வேறு முக்கியத் துறைகளில் லீலா அலெக்ஸ் முத்திரை பதித்துள்ளார்.

மாவட்ட அளவில் நில நிர்வாகம், சட்டம் ஒழுங்குப் பராமரிப்பு மற்றும் வருவாய்த் துறையின் பல்வேறு மக்கள் நலப் பணிகளைக் கையாண்ட விரிவான அனுபவம் இவருக்கு உண்டு. தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகத்தின் (SIP-COT) பொது மேலாளராகப் பணியாற்றி, மாநிலத்தின் தொழில் துறை உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றினார்.

சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளையின் (CRRT) உறுப்பினர் செயலாளராகவும் (Member Secretary) மற்றும் சென்னை நதிகள் மாற்றுத் திட்ட நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராகவும் (MD) பணியாற்றி, சுற்றுச்சூழல் மற்றும் நீர்நிலை மேம்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாக வழிநடத்தினார்.

வேலூர் மாவட்ட ஆட்சியராகப் பொறுப்பேற்றவுடன் செய்தியாளர்களிடம் பேசிய இவர், அரசின் வழிகாட்டுதலின்படி மாவட்டத்தில் நூறு விழுக்காடு வெளிப்படையான நிர்வாகம் உறுதி செய்யப்படும் என உறுதியளித்தார்.

நிர்வாக மேம்பாட்டில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தின் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளார். வேலூர் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வேகமான வளர்ச்சியடையும் நகரம் என்பதால், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க அதிகப்படியான தொழிற்சாலைகளை மாவட்டத்திற்குள் கொண்டு வர தீவிர நடவடிக்கை எடுக்க உள்ளார்.

தனது கடின உழைப்பால் உயர்ந்து, இன்று வேலூர் மாவட்டத்தின் ஆட்சியராக பொறுப்பேற்றுள்ள திருமதி பி.எஸ். லீலா அலெக்ஸ் அவர்களின் தலைமையில் வேலூர் மாவட்டம் பொருளாதார ரீதியாகப் புதிய உச்சங்களைத் தொடும் என மாவட்ட மக்கள் பெரிதும் நம்புகின்றனர்.

# பெருகும் குற்றங்கள்... தடுக்க வழி என்ன?



குற்றச்சாட்டு உள்ளவர்களிடம் காவல்துறையினர் வாங்கும் ஒவ்வொரு கையூட்டும் மேலும் பல குற்றங்கள் நடைபெற துணைபுரிவதோடு, தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடும் மன தைரியத்தையும் குற்றவாளிகளுக்குக் கொடுக்கிறது. காவல்துறையின் பல்வேறு நிலைகளில் நிலவி வரும் கையூட்டு கலாசாரத்தைத் தடுத்து நிறுத்த எடுக்கும் நடவடிக்கைகள் தான் குற்றங்களைக் குறைக்க மேற்கொள்ளும் முயற்சிகளில் முதன்மையானது.

நவீன புலனாய்வு முறைகள், தெளிவான சட்ட அறிவு, நீதிமன்ற வழக்குகள் விசாரணையில் கவனம் செலுத்துதல் போன்றவையும் குற்ற நிகழ்வுகளை கணிசமாகக் குறைக்கத் துணைபுரியும். நீதிமன்றங்களில் விசாரணைக்காக தேங்கிக் கிடக்கும் வழக்குகள், குற்றவாளிகள் குற்றச் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவதற்கான துணிவைக் கொடுக்கின்றன. வழக்கு விசாரணையை துரிதப்படுத்தாமல், என்கவுன்ட்டர் போன்ற செயல்களில் ஈடுபடுவது பிரச்னையைத் திசை திருப்பும் செயலாகும்.

ஒரு வழக்கு பதிவு செய்வதில் தொடங்கி, அந்த வழக்கில் நீதிமன்ற விசாரணை முடியும் வரை காவல்துறை யினர் பல்வேறு காரணங்களுக்காக பணம் செலவழிக்க வேண்டிய கட்டாய சூழல் நடைமுறையில் இருந்து வருகிறது.

இத்தகைய செலவினங்கள் குறித்து காவல்துறை முழுமையான ஆய்வு மேற்கொண்டு, அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றால், களப்பணியாற்றும் காவலர்கள் எதிர்கொள்ளும் தேவையற்ற செலவினங்களுக்குத் தீர்வு கிடைக்கும்; நீண்ட காலமாக நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளுக்கும் முடிவு வரும்.

அப்படி ஒரு நடைமுறை உருவானால் குற்றங்களும் குற்றவாளிகளும் குறைவதற்கு வழி பிறக்கும்.

– ஆசிரியர்


**பூத கண்ணாடி**
புலனாய்வு தமிழ் மாத இதழ்
மலர் 8 | இதழ் 7 | ஜூலை 2026 | விலைரூ.10/

வெளியீட்டாளர் :
**M.கலைவாணி முருகன்** M.Sc., M.Ed.,

ஆசிரியர்
**GR.முருகன்** 9003006655

செய்தி ஆசிரியர்:
**ஸ்ரீ வேதாத்திரியன்** M.P.

துணை ஆசிரியர்:
**P.பிரபாகரன்**
**A. சிவகுமார்** B.com. B.L. மதுரை

தலைமை செய்தியாளர்கள்:
S.**சதீஷ்குமார்,**
P.R.**ஜெயக்குமார்**, S.**தனிஷ்**

செய்தியாளர்கள்
K.**பரத்**, A.**சுனில் குமார்,**

புகைப்படக் கலைஞர்கள்
C.**நித்தியானந்தம்**

சட்ட ஆலோசகர்கள்
M.**ஞானசேகரன்** B.A., B.L.,வேலூர்
M.**ஜெயசீலன்** M.Tech., L.L.B.,
சென்னை உயர்நீதிமன்றம்

பதிவு அலுவலகம்:

**BHOOTHA KANNADI**
எண்.3/74, சாலைத் தெரு,
திம்மணாசாரிகுப்பம் அஞ்சல்,
அரப்பாக்கம், வேலூர் மாவட்டம்
Cell: 9003006655
bhoothakannadi18@gmail.com
Visit us: **bhoothakannadi.com**

வடிவமைப்பு:
**ஆர்டிஸ்ட் ராஜா** 9840643963



இதழில் வெளியாகும் விளம்பரங்களின்
உண்மைத் தன்மைக்கு
பூத கண்ணாடி நிர்வாகம் பொறுப்பல்ல.

## ராணிப்பேட்டை பகுதியில்

# ராணுவ மோட்டார் வெடிகுண்டு பாதுகாப்பாக வெடிக்கவைத்து அகற்றம்!

திமிரி அருகேயுள்ள வரகூர் மலையடிவாரத்தில் வெடிக்காத நிலையில் மண்ணில் பாதி புதைந்த நிலையில் இருந்த ராணுவ மோட்டார் வகை வெடிகுண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது. ராணுவ வீரர்கள் உதவியுடன் அதை அகற்ற வேண்டியுள்ளதால் வெடிகுண்டு இருக்கும் பகுதிக்கு 24 மணி நேரமும் போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.






ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி அடுத்த வெள்ளக்குளம் கிராமத்தில் உள்ள வரகூர் மலையடிவார பகுதியில் அதே பகுதியைச் சேர்ந்த வெங்கடேசன் என்பவர் கடந்த 19ம் தேதி சென்றுள்ளார். அங்கு, மண்ணில் பாதி புதைந்த நிலையில் வெடிகுண்டு இருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

உடனடியாக அவர் திமிரி காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளார். அதன்பேரில், போலீஸார் விரைந்து சென்றதுடன், வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்களும் சென்றுள்ளனர். அவர்கள் ஆய்வு செய்ததில் அந்த குண்டு வெடிக்கும் நிலையில் இருப்பதுடன், ராணுவம் அல்லது துணை ராணுவ படையினர் பயன்படுத்தும் மோட்டார் வகை வெடிகுண்டு என தெரியவந்தது.

இந்த வகை வெடிகுண்டுகளை பயன்படுத்தி எதிரிகளின் பதுங்கு குழிகளை அழிக்க முடியும். அல்லது எதிரிகள் முன்னேறி வராமல் இருப்பதற்கு பயன்படுத்தப்படும். எனவே, மோட்டார் குண்டு இருக்கும் பகுதிக்கு அருகில் பொதுமக்கள் யாரும் செல்லாத வகையில் பாதுகாப்பு வளையத்தை போலீஸார் ஏற்படுத்தியுள்ளனர். மேலும், அந்த இடத்தில் வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள் குழுவினர் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் கண்காணித்து வருகின்றனர். மோட்டார் குண்டை ராணுவ வீரர்கள் பாதுகாப்பாக எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதுகுறித்து, ராணிப்பேட்டை மாவட்ட காவல் துறை அதிகாரிகள் தரப்பில் விசாரித்தபோது, ‘‘இந்த மோட்டார் வகை குண்டு ராணுவ பயன்பாட்டில் இருக்கலாம் என்ற தகவல் கிடைத்துள்ளது. மோட்டார் குண்டு இருப்பது குறித்து தகவல் தெரிவித்த நபரின் வீட்டுக்கு அருகில் அடர்ந்த வனப்பகுதி உள்ளது.

கடந்த 2017ம் ஆண்டுக்கு முன்பாக அந்த மலை பகுதியில் ராணுவ வீரர்கள் சிறிய அளவிலான பயிற்சியில் ஈடுபட்டு வந்துள்ளனர். அந்த நேரத்தில் ராணுவ வீரர்கள் பயன்படுத்திய மோட்டார் குண்டு வெடிக்காமல் இருந்திருக்கலாம் என்றார்.

நிலையில், இன்று ராணுவ தளவாடங்கள் உற்பத்தி செய்யும் மையமான சென்னை ஆவடியில் இருந்து வருகை தந்த லெப்டினன்ட் கர்னல் பால்ஜிந்தர் தலைமையிலான ராணுவ வெடிகுண்டு நிபுணர்கள் நேரடியாக மலை மீது சென்று அங்கிருந்த மோட்டார் வகை வெடிகுண்டு ஆய்வு செய்து டெடனேட்டர் வெடி பொருள் வைத்து பாதுகாப்பான முறையில் வெடிக்க செய்தனர். அப்பொழுது பெரிய அளவிலான பாறைகற்கல் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. தற்பொழுது அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# தொழிற்சாலைகள் ரசாயன கழிவு நீரை வெளியேற்றினால் நடவடிக்கை!

## – அமைச்சர் காந்திராஜ்




ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள தோல் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை மற்றும் பல தொழிற்சாலைகளை நேரடியாக ஆய்வு செய்த தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் காந்திராஜ், விதிமுறைகளுக்கு மாறாக ரசாயன கழிவுநீரை தொழிற்சாலைகள் வெளியேற்றினால் பாரபட்சம் இன்றி கடுமையான நடைவாடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் இன்று காலை போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு மாரத்தான் நிகழ்ச்சியை தொடங்கி வைப்பதற்காக தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சரும், அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினருமான காந்திராஜ் ராணிப்பேட்டை தொகுதிக்கு வருகை தந்தார். நிகழ்ச்சிக்குப் பின் ராணிப்பேட்டை நகரத்தில் உள்ள தோல் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை மற்றும் சில தொழிற்சாலைகளை நேரடியாக ஆய்வு செய்தார். அறிவுக்கு பின் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் காந்திராஜ், தொழிற்சாலைகள் திடீர் ஆய்வு புகாரின் அடிப்படையில் மேற்கொண்டது அல்ல, சாதாரண ஆய்வு தான் என கூறினார்.

இங்கு செயல்படும் தொழிற்சாலைகள் விதிமுறைகளுக்கு மாறாக ரசாயன கழிவு நீரை சுத்திகரிப்பு செய்யாமல் வெளியேற்றினால் பாரபட்சம் இன்றி கடுமையான நடவடிக்கை துறை ரீதியாக எடுக்கப்படும் என தெரிவித்தார்.

# பேருந்து நிழற்குடை இல்லாததல் மக்கள் அவதி!




ராணிப்பேட்டை ஆட்சியர் அலுவலகம் எதிரே பாரதி நகர் பேருந்து நிறுத்தத்தில் சாலை விரிவாக்கப் பணிகளுக்காகவும், புதிய நிழற்குடை அமைக்கும் திட்டத்திற்காகவும் பழைய நிழற்குடை அகற்றப்பட்டது.

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு, ராணிப்பேட்டை தனி மாவட்டத் தலைநகரமாகச் செயல்பட்டு வருகிறது. இதனால் மாவட்டத்தின் மிக முக்கிய நிர்வாக மையமான இந்த இடத்திற்கு தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர்.

குறிப்பாக வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், ஆட்சியரிடம் மனு அளிக்க வரும் முதியவர்கள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பேருந்துக்காக நீண்ட நேரம் வெயிலில் திறந்தவெளியில் காத்திருக்கின்றனர்.

தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், நிழற்குடை இல்லாமல் பயணிகள் அருகில் உள்ள கடைகளின் ஓரங்களில் தஞ்சமடையும் நிலை உள்ளது.

புதிய நிரந்தர நிழற்குடை அமைக்கும் பணிகள் காலதாமதம் ஆகும் என்பதால், தற்போதைய வெயிலைச் சமாளிக்க ராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகம் அங்கு உடனடியாக தற்காலிக நிழற்கூரை அமைத்துத் தர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# லாப வெறியால் மாணவர்களின் உயிருடன் விளையாடும் நிர்வாகம்!

## பேரணாம்பட்டு ஸ்ரீ கிருஷ்ணா மெட்ரிகுலேஷன் பள்ளி பேருந்து அவலம்!







பேரணாம்பட்டு மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகளை ஏற்றிச் செல்லும் ஸ்ரீ கிருஷ்ணா மெட்ரிகுலேஷன் பள்ளியின் பேருந்துகள் தற்போது மிகவும் மோசமான, அபாயகரமான நிலையில் இயக்கப்பட்டு வருகின்றன. துருப்பிடித்த இரும்புத் தகடுகள், உடைந்த ஜன்னல்கள், முறையற்ற பிரேக் வசதி என எந்தவொரு தார்மீகப் பாதுகாப்பு விதிகளும் இன்றி இந்த வாகனங்கள் சாலைகளில் வலம் வருகின்றன. பிஞ்சுப் பிள்ளைகளின் பாதுகாப்பை முற்றிலும் புறந்தள்ளி, பள்ளி நிர்வாகம் காட்டும் இந்த மெத்தனப் போக்கு பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கல்வி நிறுவனமா அல்லது லாப வெறி சூதாட்டமா என்ற கேள்வி எழும் அளவிற்கு, மனிதத்தன்மையற்ற முறையில் இந்த பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பெற்றோர்களிடம் இருந்து வாகனக் கட்டணம் என்ற பெயரில் தொகையை கறாராக வசூலிக்கும் நிர்வாகம், அந்தப் பணத்தில் ஒரு சிறு பகுதியைக்கூட பேருந்துகளின் தரத்தைப் பராமரிக்க செலவிடுவதில்லை. தினசரி அச்சத்தோடும், மரண பயத்தோடும் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டிய அவல நிலைக்குப் பெற்றோர்கள் தள்ளப்பட்டுள்ளனர். லாபம் மட்டுமே குறிக்கோள் என்ற நிர்வாகத்தின் இந்த சுயநலம், மனிதநேயமற்ற செயல்பாட்டின் உச்சமாகும்.

இந்த விவகாரத்தில் அரசு அதிகாரிகளின் அலட்சியமும், மெத்தனப் போக்கும் கண்டிக்கத்தக்கது. பள்ளி வாகனங்களை முறையாக ஆய்வு செய்து தகுதிச் சான்றிதழ் (FC) வழங்க வேண்டிய போக்குவரத்துத் துறை மற்றும் கல்வித் துறை அதிகாரிகள், தங்களின் கடமையில் இருந்து முற்றிலும் தவறிவிட்டனர். ஏதேனும் ஒரு பெரும் அசம்பாவிதம் நடந்த பிறகுதான் அதிகாரிகள் விழித்துக் கொள்வார்களா என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

மாணவர்களின் உயிரோடு விளையாடும் ஸ்ரீ கிருஷ்ணா மெட்ரிகுலேஷன் பள்ளி நிர்வாகத்தின் இந்த லாப வெறியை வன்மையாகக் கண்டிக்கிறோம். சம்பந்தப்பட்ட உயர்மட்ட அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு, இந்த பள்ளி பேருந்துகளை ஆய்வு செய்ய வேண்டும். தகுதி இழந்த வாகனங்களை உடனடியாக பறிமுதல் செய்வதோடு, விதிமீறலில் ஈடுபடும் பள்ளி நிர்வாகத்தின் மீது கடுமையான சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இப்பகுதி பொதுமக்கள் மற்றும் பெற்றோர்கள் சார்பாக உறுதியுடன் வலியுறுத்துகிறோம்



# அரசு பள்ளிக்குள் விஜய் போட்டோவுடன் மீண்டும் ரீல்ஸ்..

## அத்துமீறும் தவெகவினர்... நடவடிக்கை எடுக்குமா அரசு?

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் அனுமதியின்றி நுழைந்து முதலமைச்சர் விஜயின் புகைப்படத்துடன் ரீல்ஸ் எடுத்ததுடன், மாணவர்களிடம் பிறந்தநாள் வாழ்த்துப் பாடல் பாட வைத்த சம்பவத்திற்கு பெற்றோர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் தவெகவைச் சேர்ந்த சிலர் கட்சி அடையாளங்களுடன் பள்ளி வளாகத்திற்குள் சென்று, முதலமைச்சர் விஜயின் புகைப்படத்தை கையில் ஏந்தியபடி வீடியோ பதிவு செய்த காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. பள்ளி மாணவர்களை வரிசையாக அமர வைத்து, "நீண்ட நீண்ட காலம்..." என்ற பிறந்தநாள் வாழ்த்துப் பாடலை பாட வைத்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான வீடியோக்கள் இணையத்தில் பரவிய நிலையில், பள்ளி வளாகத்தை அரசியல் நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, மாணவர்களை அரசியல் சார்ந்த நிகழ்வுகளில் ஈடுபடுத்தியுள்ளது பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோன்ற சம்பவம் ஏற்கனவே திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியிலும் நடைபெற்றது. அங்கும் தவெகவினர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு பள்ளி வளாகத்தில் கொண்டாட்டம் நடத்தியிருந்தனர். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, பள்ளிகளுக்குள் கட்சி அடையாளங்களுடன் சென்று எந்தவித அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது என்றும், மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்றும் தவெக தலைமையே ஏற்கனவே நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தியிருந்தது.

ஆனாலும், தொடர்ந்து இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுவது பெற்றோர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரணை நடத்த வேண்டும் என்றும், பள்ளி வளாகங்களில் அரசியல் நடவடிக்கைகள் நடைபெறாமல் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பெற்றோர்கள் வலியுறுத்தியுள்ளனர்.



# மாறிய அரசியல் திசைவழி: தவெகவின் புதிய பாய்ச்சல்!

தமிழக அரசியல் வரலாறு 2026 மே மாதத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைக் கண்டது. 59 ஆண்டுகால திராவிடக் கட்சிகளின் இருமுனை ஆதிக்கத்தை உடைத்தெறிந்து, நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களுடன் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது. தேர்தலில் தோல்வியடைந்து திமுக ஆட்சியை இழந்ததால், தவெக புதிய உத்வேகத்துடன் புத்துணர்ச்சி பெற்றுள்ளது. அதேநேரம், சட்டமன்றத்தில் எப்போது வேண்டுமானாலும் திமுக மற்றும் அதிமுக இணைந்து நெருக்கடி கொடுக்கலாம் என்ற சூழல் நிலவியதால், தவெக தனது பெரும்பான்மையை 118 என்ற மேஜிக் எண்ணைத் தாண்டி உயர்த்த திட்டமிட்டது. இதன் விளைவாகவே, மாற்றுக்கட்சி தலைவர்களை தன்பக்கம் இழுக்கும் அதிரடிப் படலம் தவெகவில் அரங்கேறி வருகிறது.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி தலைமையிலான தற்போதைய செயல்பாடுகளால் அதிருப்தியடைந்த அக்கட்சியின் மூத்த தலைவர்கள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தவெகவை நோக்கி படையெடுத்து வருகின்றனர்.

அதிமுகவின் மிக முக்கியமான முகங்களான முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் சி. விஜயபாஸ்கர், முன்னாள் போக்குவரத்துத்துறை அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் மற்றும் முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன் ஆகியோர் மாமல்லபுரத்தில் நடைபெற்ற பிரம்மாண்ட நிகழ்வில் தவெக பொதுச்செயலாளர் என். ஆனந்த் முன்னிலையில் முறைப்படி கட்சியில் இணைந்தனர்.

கரூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர். விஜயபாஸ்கர் மற்றும் விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் சி. விஜயபாஸ்கர் ஆகியோர் தங்களது சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை முறைப்படி சபாநாயகரிடம் ராஜினாமா செய்துவிட்டு தவெகவுக்கு வந்துள்ளனர். முன்னதாக மே 13 அன்று நடந்த தவெக அரசின் நம்பிக்கை வாக்கெடுப்பில், அதிமுகவின் கொறடா உத்தரவை மீறி 25

எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்கள் முதல்வர் விஜய்க்கு ஆதரவாக வாக்களித்தது குறிப்பிடத்தக்கது.

அதிமுகவின் இரண்டு முன்னாள் அமைச்சர்கள், 15 முன்னாள் எம்.எல்.ஏக்கள் மற்றும் சுமார் 15,000க்கும் மேற்பட்ட களப்பணியாளர்கள் 200 கார்கள் மற்றும் 600 பேருந்துகளில் அணிவகுத்து வந்து தவெகவில் இணைந்துள்ளனர். இது அதிமுகவின் வாக்கு வங்கியையும், மாவட்ட அளவிலான தேர்தல் பணி உள்கட்டமைப்பையும் ஒட்டுமொத்தமாக தவெகவுக்கு மாற்றியுள்ளது.

கோயம்புத்தூர் மற்றும் கொங்கு மண்டலத்தில் அதிமுகவின் தூண்களாகக் கருதப்படும் எஸ்.பி. வேலுமணி, பி. தங்கமணி போன்ற அதிருப்தி தலைவர்களும் எடப்பாடி பழனிசாமியின் புதிய பதவிகளை ஏற்க மறுத்து, தவெகவில் இணைவது குறித்து ஆலோசித்து வருகின்றனர்.

ஆட்சியை இழந்த திமுக, எப்படியாவது தவெக ஆட்சியை கவிழ்க்க திரைமறைவு வேலைகளில் ஈடுபட்டு வருவதாக தவெக பரபரப்பு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது.

₹50 கோடி பேரம்: தவெக சட்டமன்ற உறுப்பினர்களை இழுக்க திமுக தரப்பில் தலா ₹50 கோடி வரை பேரம் பேசப்பட்டதாக தமிழக மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் நிர்மல்குமார் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

அதிமுக திமுக மறைமுக கூட்டணி முயற்சி: திமுக தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலினும், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் தங்களது குடும்ப சொத்துக்களைக் காப்பாற்றிக்கொள்ள இணைந்து ஆட்சி அமைக்க முயற்சிப்பதாகவும், அதன் விளைவாகவே அதிருப்தியடைந்த அதிமுகவினர் தவெகவில் இணைந்து வருவதாகவும் அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்தார்.

திமுக கூட்டணியில் (மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி) இருந்த முக்கிய தோழமைக் கட்சிகள் அனைத்தும் தற்போது தவெக பக்கம் சாய்ந்துவிட்டன. கோவளத்தில் முதல்வர் விஜய் தலைமையில் நடைபெற்ற உயர்நிலைக் குழு கூட்டத்தில், தவெக, காங்கிரஸ், விசிக, மதேமு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (IUML), மற்றும் இடதுசாரி கட்சிகள் (சிபிஐ மற்றும் சிபிஎம்) இணைந்து ஒரு முறையான தேர்தல் கூட்டணியை (TVK-led Alliance) அதிகாரப்பூர்வமாக பிரகடனப்படுத்தியுள்ளன. அண்மையில் வைகோ தலைமையிலான மதிமுகவும் திமுக உறவை முறித்துக் கொண்டு தவெக அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ளது.

திமுக, அதிமுக ஆகிய இரு திராவிடப் பேரியக்கங்களும் தவெகவின் இந்த அசுர வளர்ச்சியைத் தடுக்க முடியாமல் திணறி வருகின்றன. அதிமுக கூடாரத்தின் உள்கட்டமைப்பை தவெக முழுமையாக உறிஞ்சி உட்கொள்வதன் மூலம், வரும் 2031 சட்டமன்றத் தேர்தலில் தவெக ஒரு மாபெரும் தனித்த பெரும்பான்மை சக்தியாக உருவெடுக்கும் என்பதில் சந்தேகமும் இல்லை. தமிழக அரசியல் இனி 'திராவிட சமர்' அல்ல, அது 'புதிய தலைமுறை தவெக'வின் ஆதிக்கம் என்பதை தற்போதைய எம்.எல்.ஏக்கள் மற்றும் அமைச்சர்களின் சேர்க்கை படலம் அப்பட்டமாக உணர்த்துகிறது.

# டெல்லி சிறப்பு பிரதிநிதி வெங்கட நாராயணனை நீக்க திமுக வலியுறுத்தல்



திமுக வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம் வெளியிட்ட அறிக்கை: கன்னட பட தயாரிப்பாளர் வெங்கட நாராயணாவை தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியாக நியமிக்கலாமா என்று கேட்டால், திருநாவுக்கரசரை மத்திய பிரதேசத்தில் இருந்து எம்பி ஆக்கவில்லையா என்கிறார் அமைச்சர் செங்கோட்டையன்.

நாடாளுமன்ற உறுப்பினராக இந்தியர் ஒருவர் இந்தியாவில் எங்கும் நிற்கலாம். சட்டப் பேரவைக்கு அந்த மாநிலத்துக்குள் வாக்காளராக இருக்க வேண்டும் என்பதும், கவுன்சிலருக்கு அந்த வார்டிலேயே வாக்காளராக இருக்க வேண்டும் என்பதும் கூடவா செங்கோட்டையனுக்கு தெரியாது.

டெல்லியில் தானே வேலை செய்வார் என்கிறார் அமைச்சர் நிர்மல்குமார். டெல்லியில் உள்ளவர்களுக்காக வேலை செய்யப் போகிறாரா? தமிழர்களுக்காகத் தானே பேசப்போகிறார். அதிமுகவில் இருந்து தவெகவில் இணைந்த முன்னாள் அமைச்சர்களில் ஒருவரையோ அல்லது புதிய நபரையோ நியமிக்கலாம். வெங்கட நாராயணனை நீக்கலாம் என தெரிவித்துள்ளார்.

# மருத்துவச்சான்று வழங்க லஞ்சம் வாங்கிய பெண் மருத்துவர் கைது

## – லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி

வேலூர், காட்பாடி அடுத்த அக்கிரெட்டிபுதூர் கிராமத்தைச் சேர்ந்த ரங்கனுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர்.

இவர்களுக்கு தடுப்பூசி போட்ட விவரத்தை குறிப்பிட வேண்டும் என்று தனியார் பள்ளி நிர்வாகம் அறிவுறுத்தியது. இதனிடையே குழந்தைகளுக்கு மருத்துவ தகுதி சான்றிதழ் வாங்க காட்பாடி பள்ளிக்குப்பத்தில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றுள்ளார்கள். அங்கு மருத்துவ தகுதிச்சான்று வழங்க ரூ.900 லஞ்சம் வாங்கிய அரசு பெண் டாக்டரை லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும் களவுமாக பிடித்து கைது செய்தார்கள்.



மருத்துவர் வெங்கடலட்சுமி

வேலூர், காட்பாடி அருகே உள்ளது அக்கிரெட்டிபுதூர் கிராமம்.இந்த கிராமத்தைச் சேர்ந்தவர் ரங்கன். இவருடைய மனைவி ரவீனா. இவர்களுக்கு தீக்ஷிதா, பிரதீஷ்வர், லியாஸ் பகத்சிங் என 3 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்கள் காட்பாடியில் உள்ள தனியார் பள்ளியில் முறையே 5, 4 மற்றும் 1ம் வகுப்புகளில் படித்து வருகிறார்கள். பள்ளி நிர்வாகத்தின் அறிவுறுத்தலின் பேரில் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்ட விவரம், உடல் தகுதி குறித்த மருத்துவச்சான்று பெறுவதற்காக, கடந்த 22ந் தேதி காலை 11 மணிக்கு காட்பாடி பள்ளிக்குப்பத்தில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு குழந்தைகளின் தாய் ரவீனா சென்றுள்ளார்.

அங்கு பணியில் இருந்த பெண் டாக்டர் வெங்கடலட்சுமியிடம் குழந்தைகளுக்கு மருத்துவ தகுதி சான்றிதழ் கேட்டுள்ளார். அதற்கு தகுதி சான்றிதழ் வழங்க ஒரு குழந்தைக்கு ரூ.300 வீதம் மூன்று குழந்தைகளுக்கு மொத்தம் ரூ.900 தர வேண்டும் என டாக்டர் கூறி உள்ளார்.

அதற்கு ரவீனா தன்னிடம் பணம் இல்லை எனக்கூறியதற்கு, டிஜிட்டல் பரிவர்த்தனையில் பணத்தை அனுப்ப வேண்டும் என்றும், பணம் கொடுக்கவில்லை என்றால் வேறு இடத்தில் தகுதிச்சான்றிதழ் பெற்று கொள்ளும்படி கூறிவிட்டாராம்.

லஞ்சம் கொடுத்து சான்றிதழ் பெற விரும்பாத ரவீனா, டாக்டர் பணம் கேட்டு பேசியதை, தனது செல்போனில் ரகசியமாக ஆடியோ பதிவு செய்து, அந்த ஆதாரத்துடன் வேலூர் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் கொடுத்தார்.

அதன்பேரில் வேலூர் லஞ்ச ஒழிப்பு போலீசார் ரசாயன பவுடர் தடவிய ரூ.900 பணத்தை ரவீனாவிடம் கொடுத்து டாக்டர் வெங்கடலட்சுமியிடம் கொடுக்குமாறு அனுப்பினர். அவர் நேற்று முன்தினம் மாலை சுகாதார நிலையத்தில் ரசாயனம் தடவிய பணத்தை டாக்டர் வெங்கடலட்சுமியிடம் கொடுத்துள்ளார்.

அப்போது ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வெளியே காத்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் உள்ளே சென்று ரசாயனம் தடவிய பணத்துடன் டாக்டர் வெங்கடலட்சுமியை கையும் களவுமாக பிடித்து அதிரடியாக கைது செய்தனர். மேலும் இந்த சம்பவம் குறித்து லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் காட்டிபாடியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.





# குடியாத்தம் புறவழிச்சாலையில் கொட்டப்படும் இறைச்சிக் கழிவுகள்!

## – சுகாதார சீர்கேட்டால் பொதுமக்கள் அவதி!

வேலூர் மாவட்டம் குடியாத்தம் புறவழிச்சாலை (பைபாஸ் சாலை) பகுதியில், விதிகளை மீறி நள்ளிரவு நேரங்களில் இறைச்சிக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதி முழுவதும் கடும் துர்நாற்றம் வீசுவதுடன், கடுமையான சுகாதார சீர்கேடும் ஏற்பட்டுள்ளது.

தினமும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் கடந்து செல்லும் இந்த முக்கிய சாலையில், கழிவுகள் திறந்தவெளியில் கொட்டப்படுவதால் வாகன ஓட்டிகள் மூக்கைப் பொத்திக்கொண்டு செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இருசக்கர வாகன ஓட்டிகள் இந்த துர்நாற்றத்தால் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

சாலையோரம் தேங்கிக் கிடக்கும் இறைச்சிக் கழிவுகளால் அப்பகுதியில் ஈக்கள், கொசுக்கள் மற்றும் காக்கைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. மேலும், தெருநாய்கள் இக்கழிவுகளைச் சாலையின் நடுவே இழுத்து வருவதால் விபத்துகளும் ஏற்படுகின்றன. மழைக்காலம் தொடங்கும் பட்சத்தில், இந்த கழிவுகள் மூலம் தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

குடியாத்தம் நகருக்குள் வராமல் வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் கனரக வாகனங்கள் இந்த சாலையையே அதிகம் பயன்படுத்துகின்றன. இப்பகுதியில் தெருவிளக்குகள் போதிய அளவில் இல்லாததால், நள்ளிரவில் மாமிசக் கடைகளின் கழிவுகள் எளிதாகக் கொட்டப்படுகின்றன. சாலையோரக் கால்வாய்கள் மற்றும் அருகிலுள்ள விளைநிலங்களில் இந்த கழிவுநீர் கலப்பதால் நிலத்தடி நீரும் மாசடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அப்பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கூறுகையில், "பலமுறை புகார் அளித்தும் இறைச்சிக் கழிவுகளைக் கொட்டுபவர்கள் மீது இதுவரை முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நகராட்சி நிர்வாகமும், காவல்துறையும் இணைந்து இந்த பகுதியில் இரவு நேரக் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும்" என வலியுறுத்தியுள்ளனர்.

தேங்கிக் கிடக்கும் இறைச்சிக் கழிவுகளை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

விதிகளை மீறி கழிவுகளைக் கொட்டும் கடைகளுக்கு அபராதம் விதிக்க வேண்டும். இப்பகுதியில் கண்காணிப்பு கேமராக்களை (CCTV) பொருத்தி, சமூக விரோத செயல்களைத் தடுக்க வேண்டும்.

பொதுமக்களின் நலன் கருதி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விவகாரத்தில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.






# தேர்தலில் திமுக தோற்றதால் மன உளைச்சலில் உளறி கொட்டுகிறார் ஆ.ராசா!

## - அமைச்சர் வன்னியரசு

தேர்தல் தோல்விக்கு பின் ஆ.ராசா மன உளைச்சலில் உளறி கொட்டுகிறார் வி.சி.க, இடதுசாரிகள் குறித்த அவர் விமர்சனம் திமுகவை பாஜகவின் வசம் இழுத்து செல்கிறதா என்ற ஐயம் எழுகிறது சமூக நீதித்துறை என அமைச்சர் வன்னியரசு காட்டமாக கூறியுள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் இன்று நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக விடுதலை சிறுத்தை கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை( சமூக நீதித்துறை) அமைச்சர் வன்னியரசு வருகை தந்தார். நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தந்த அவருக்கு வாலாஜாபேட்டை சுங்கச்சாவடியில் ராணிப்பேட்டை மத்திய மாவட்ட செயலாளர் சீ.மா.ரமேஷ் கருணா தலைமையில் நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து ஆற்காடு அடுத்த கிருஷ்ணாபுரம் பகுதியில் ஓடை கால்வாயை ஆக்கிரமித்து தனிநபர் சுற்றுச்சுவர் அமைத்ததை கண்டித்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் பாதிக்கப்பட்ட பொதுமக்களை நேரில் சந்தித்து குறைகளை கேட்டு அறிந்தார். அப்போது செய்தியாளர்களை சந்தித்த அவர்,

தமிழகத்தில் தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த முறையை தனியார் மயமாக்குவதை ரத்து செய்ய வேண்டும் என விசிக தலைவர் திருமாவளவன் இரு தினங்களுக்கு முன்பு அளித்த அறிக்கையை ஏற்று தமிழக முதல்வர் ஒப்பந்த முறையை நிறுத்தி வைத்துள்ளார். இதனை விடுதலை சிறுத்தைகள் கட்சி வரவேற்கிறது. அதேபோல பிற விமர்சனங்களை வி.சி.க. கட்சி புறக்கணிக்கிறது.

தாட்கோ மூலம் வங்கிகளில் கடன் பெறும் நடைமுறையை எளிமையாக ஒரு குழுவை அமைத்து நடைமுறைகளை வகுத்து உள்ளோம். கூடிய விரைவில் தாட்கோ மூலம் வங்கிகளில் கடன் பெறும் முறை எளிமையாக்கப்படும்.

தேர்தல் தோல்விக்கு பிறகு ஆ.ராசா அவர்கள் மன உளைச்சலில் உளறிக் கொண்டிருக்கிறார். விடுதலை சிறுத்தைகள் கட்சி மற்றும் இடதுசாரிகள் மீதான அவரது விமர்சனம் திமுகவை பாஜகவின் பக்கம் இழுத்துச் செல்கிறதோ என்ற ஐயம் எழுந்துள்ளது. மற்றபடி அவர் விமர்சனத்தில் வேறு ஏதேனும் பொருள் இருப்பதாக தெரியவில்லை என்றார் அமைச்சர் வன்னியரசு.

## 2,600 கி.மி பயணித்து

# இருசக்கர வாகனத்தில் கஞ்சா கடத்திய தம்பதி!






2,600 கி.மீ., தொலைவுக்கு இருசக்கர வாகனத்தில் சென்று 12 கிலோ கஞ்சாவை கடத்தி வந்த அரக்கோணத்தை சேர்ந்த சிறுவன் உட்பட 2 பேரை அரக்கோணம் மதுவிலக்கு அமல் பிரிவு போலீசார் கைது செய்தனர் . அவர்களிடம் இருந்து கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனம், 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. 6 நாட்களுக்கு தொடர்ந்து இருசக்கர வாகனத்தில் பயணம் செய்து கஞ்சாவை கடத்தி வந்தது போலீஸ் விசாரணையில் தெரிந்தது.

தமிழக முதல்வர் ஜோசப் விஜய் போதைப் பொருள் நடமாட்டத்தை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில் ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் மதுவிலக்கு அமல் பிரிவு போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அரக்கோணம் அடுத்த இரட்டைக் குளம் செக் போஸ்ட் பகுதியில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தனர் . இதில் வாலிபர் ஒருவர் 2 பைகளை வைத்திருந்தார். சந்தேகத்தின்பேரில் பைகளை திறந்து பார்த்ததில் கஞ்சா பொட்டலங்கள் இருந்தது தெரியவந்தது.

அதனைத் தொடர்ந்து போலீசார் இருசக்கர வாகனத்தில் வந்த வாலிபர் மற்றும் அவருடன் வந்த 15 வயது சிறுவன் ஆகியோரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்து விசாரணை செய்தனர்.

இதில் போலீசுக்கே அதிர்ச்சி தரும் வகையில் அரக்கோணம் அடுத்த பாராஞ்சி ஜோதி மோட்டூரை சேர்ந்த ராஜேஷ் (28) மற்றும் அவரது உறவினரான 15 வயது சிறுவன் ஆகிய இருவரும் இரு சக்கர வாகனத்தில் 1300 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒடிசாவுக்கு சென்று அங்கு கஞ்சாவை வாங்கி வந்து அரக்கோணம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் விற்பனை செய்தது தெரிய வந்தது .

மேலும் போலீசாரால் கைது செய்யப்பட்ட ராஜேஷ் யாரையும் நம்பாமல் அவனே நேரடியாக சென்று கஞ்சாவை வாங்கி வந்து விற்பனை செய்வது வழக்கமாம்.

மேலும் ஒடிசா மாநிலத்திற்கு தொடர்ந்து இருசக்கர வாகனத்தில் 3 நாட்கள் சென்று அங்கிருந்து திரும்பவும் அரக்கோணத்திற்கு 3 நாட்கள் என மொத்தம் 6 நாட்களுக்கு 2,600 கி.மீ., தொலைவுக்கு இருசக்கர வாகனத்தில் சென்று கஞ்சாவை கடத்தி வந்தது தெரிந்தது .

ராஜேஷிடம் இருந்து 12 கிலோ கஞ்சா, கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட ஒரு இரு சக்கர வாகனம், 2 செல்போன்களை போலீசார் பறிமுதல் செய்தனர் . 15 வயது சிறுவன் வாலாஜா அரசு சிறுவர் காப்பகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். கஞ்சாவை கடத்தி வர இருசக்கர வாகனத்திலேயே 2,600 கிலோமீட்டர் தொலைவிற்கு சென்று வந்த சம்பவம் போலீசாருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கஞ்சா கடத்தி வந்த ராஜேஷ் சில ஆண்டுகளுக்கு முன்பு திருட்டு வழக்கில் அரக்கோணம் போலீஸாரால் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டு இருவரும் விசாரணைக்காக அரக்கோணம் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தபோது தப்பி சென்றனர். மீண்டும் போலீசார் இருவரையும் கைது செய்தனர்.

# விவசாய நிலத்தில் விதிமீறலாக RO பிளான்ட்!

## திமிரி பேரூராட்சி வார்டு உறுப்பினர் மீது குற்றச்சாட்டு...
## விளாரி VAO, EB உதவி மின் பொறியாளர் உடந்தை!

திமிரி பேரூராட்சி 13வது வார்டு உறுப்பினர் லோவகேஸ்வரி ராமு என்பவருக்கு, விளாரி கிராம ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் ஆர்.கே. ரைஸ் மில்லுக்கு எதிரே சுமார் ஒன்றரை ஏக்கர் நிலம் உள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நிலம் சில ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசின் ரயில்வே திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்டதாகவும், திட்டப்பணிகள் இன்னும் தொடங்காத நிலையில் தொடர்ந்து விவசாயம் செய்யப்பட்டு வந்ததாகவும் தெரிகிறது.

இந்நிலையில், விவசாயத்திற்காக வழங்கப்பட்ட இலவச மின் இணைப்பு மற்றும் கிணற்று நீரை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி, கடந்த இரண்டு ஆண்டுகளாக வணிக ரீதியில் குடிநீர் விற்பனை நடைபெற்று வருவதாகப் புகார் எழுந்துள்ளது. விவசாய நிலத்தில் கான்கிரீட் கட்டிடம் அமைத்து, முறையான அனுமதிகள் இன்றி இந்த RO சுத்திகரிப்பு நிலையம் தன்னிச்சையாக இயக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

நிலத்தடி நீர் பரிசோதனை சான்றிதழ் மற்றும் எவ்வித வணிக அனுமதியும் இல்லாமல், தினமும் அதிகாலை 5 மணி முதல் 8 மணி வரை லாரிகள் மற்றும் வாகனங்கள் மூலம் நூற்றுக்கணக்கான கேன்களில் தண்ணீர் எடுத்துச் சென்று விற்பனை செய்யப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். ஒரு கேன் 15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு, தினமும் பல்லாயிரக்கணக்கில் வருமானம் ஈட்டப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இந்த விதிமீறல் விவகாரத்தில், விளாரி பகுதி கிராம நிர்வாக அலுவலர் (VAO) மற்றும் அப்பகுதி மின்வாரிய உதவி பொறியாளர் (JE) ஆகியோர் உரிய நடவடிக்கை எடுக்காமல், உடந்தையாக இருந்து அனுமதி வழங்கியுள்ளதாக சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் தரப்பில்







கடுமையான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

தற்போது அந்த நிலத்தில் பயிர்கள் பயிரிடப்பட்டிருந்தும், போதிய தண்ணீர் பாய்ச்சப்படாததால் பயிர்கள் வாடி வருவதாகவும், விவசாயத் தேவையை விட குடிநீர் விற்பனைக்கே முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் இதனால் அருகாமையில் உள்ள விவசாயக் கிணறுகள் தண்ணீர் வற்றி வருவதாகவும் உள்ளூர் விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

மக்கள் பிரதிநிதியாக இருக்கும் வார்டு உறுப்பினர் மற்றும் அதற்கு உடந்தையாக இருக்கும் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள் மீது ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் பிரியா உடனடியாக தலையிட்டு நேரடி விசாரணை நடத்த வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். விதிமீறல் உறுதி செய்யப்பட்டால், சட்டவிரோத குடிநீர் நிலையத்திற்கு சீல் வைத்து, தொடர்புடையவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சரத்தை வீழ்த்திய திமுக.. பழைய பதிவுகளை டெலிட் செய்யும் தவெக அமைச்சர்கள்



தமிழக மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் 'கில்லி' சரத்குமாரின் பழைய வீடியோ ஒன்று, தற்போதைய தவெக அரசாங்கத்தையே உலுக்கி வரும் நிலையில், அக்கட்சியின் மற்ற அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இடையே கடுமையான பயமும் பதற்றமும் தொற்றிக் கொண்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் மேயர் பிரியா தலைமையில் திமுக நடத்திய மாநிலம் தழுவிய வீதிப் போராட்டங்களின் ஆக்ரோஷத்தை பார்த்த தவெக மக்கள் பிரதிநிதிகள், தற்போது தங்களது சமூக வலைதள பக்கங்களை அவசர அவசரமாக 'சுத்தம்' செய்யும் பணிகளில் இறங்கியுள்ளனர்.

தற்போது அமைச்சர்களாகவும் எம்.எல்.ஏ க்களாகவும் இருக்கும் தவெக வின் முக்கிய நிர்வாகிகள் பலரும், கடந்த காலங்களில் சினிமா, கலைத்துறை மற்றும் பொது வாழ்க்கையில் மிகவும் ஜாலியாக வலம் வந்தவர்கள். குறிப்பாக, பல ஆண்டுகளுக்கு முன்பு நண்பர்களுடன் பார்ட்டிகளில் எடுத்த வீடியோக்கள், கிரிக்கெட் மைதானங்களில் கொண்டாடிய கொண்டாட்டங்கள், சினிமா பாணி 'Thug Life' எடிட்கள் என ஏராளமான பதிவுகளை தங்களது தனிப்பட்ட இன்ஸ்டாகிராம் பக்கங்களில் அவர்கள் பதிவிட்டிருந்தனர். சிலர் பிளாக் டிக்கெட் கூட விற்றுக்கொண்டு அதற்கான போஸ்டுகளை போட்டு இருந்தனர்.

தற்போது அமைச்சர் 'கில்லி' சரத்தின் 2 வருட பழைய வீடியோவை திமுக எப்படி பூதக்கண்ணாடியை வைத்து தேடிப்பிடித்து, மாநில அளவிலான போராட்டமாக மாற்றியதோ, அதேபோல் தங்களது பழைய லூட்டிகளும் தங்களுக்கு எதிராகவே ஆயுதமாக மாறக்கூடும் என்று இவர்கள் அஞ்சுகின்றனர். இது அரசியல் ரீதியாக தங்களை காலி செய்துவிடுமோ என்ற பயத்தில், சமூகவளைதல பதிவுகளை டெலிட் செய்கின்றனர்.

தவெக வின் தகவல் தொழில்நுட்ப அணி (IT Wing) தங்களது அமைச்சர்களுக்கும் எம்.எல்.ஏக்களுக்கும் ஒரு ரகசிய 'அலர்ட்' உத்தரவை பிறப்பித்துள்ளதாக கூறப்படுகிறது. அமைச்சர்கள் தங்களின் தனிப்பட்ட இன்ஸ்டாகிராம் பக்கங்களில் இருக்கும் அனைத்து 'ரீல்ஸ்' மற்றும் சர்ச்சைக்குரிய பார்ட்டி வீடியோக்களை உடனடியாக நீக்க வேண்டும்.

குறிப்பாக, போதைப்பொருள் ஒழிப்பு கொள்கையை பேசும் தவெக வுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் மதுக்கோப்பைகளுடனோ அல்லது கிளப்களிலோ எடுக்கப்பட்ட பழைய பதிவுகள் 'கூண்டோடு' அழிக்கப்பட வேண்டும்.

சமூக வலைதளங்களில் ஹீரோக்களாக வலம் வந்த தவெக வினர், இன்று திமுகவின் தீவிரமான அரசியலை பார்த்து தற்காப்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். "பதிவுகளை நீக்கினாலும் பரவாயில்லை, நாங்கள் அனைத்தையும் ஏற்கனவே 'ஸ்கிரீன் ரெக்கார்ட்' செய்துவிட்டோம் என திமுக ஐடிவிங் சவால் விடுத்து வருகின்றனர்.





# ரூ.100 கோடி மோசடி; பாதிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் புகார் கொடுக்கலாம்!

## – சென்னை காவல் ஆணையர்

தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் பெற்றுத் தருவதாக கூறி ரூ.100 கோடி மோசடி செய்யப்பட்ட விவகாரத்தில் பாதிக்கப்பட்ட பள்ளி நிர்வாகங்கள் புகார் கொடுக்கலாம் என்று காவல் ஆணையர் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தமிழகத்தில் உள்ள பல தனியார் பள்ளி நிர்வாகிகள் தங்களது பள்ளிகளுக்கான நிரந்தர அங்கீகாரம், தரம் உயர்த்துதல், மற்றும் DTCP/CMDA அனுமதிகளைப் பெறுவதில் கடுமையான சிரமங்களைச் சந்தித்து வந்திருக்கின்றனர்.

சென்னை சாலிகிராமத்தில் பதிவு செய்யப்படாத 'தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கம்' என்ற அமைப்பை நடத்தி வந்த பி.டி.அரசகுமார், தனக்கு இருக்கும் அரசியல் மற்றும் அதிகாரப் பலத்தைப் பயன்படுத்தி தமிழகத்தில் தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் பெற்று தருவதாக கூறி ரூ.100 கோடி அளவுக்கு மோசடி செய்ததாக பி.டி.அரசகுமார் பேரில் சென்னை தியாகராய நகரில் செயல்படும் தனியார் பள்ளி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் ஒரு புகார் கொடுக்கப்பட்டது.

இதுகுறித்து சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்தனர். புகாருக்கு உள்ளான திமுக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவரான பி.டி.அரசகுமாரை கடந்த 27ம் தேதி கைது செய்தனர். இவரது பின்னணியில் முன்னாள் எம்எல்ஏ உட்பட மேலும் சிலர் இருப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. முன்னாள் எம்எல்ஏவை போலீஸார் தேடி வருகின்றனர்.

இந்நிலையில், சென்னை காவல் ஆணையர் அமல்ராஜ் வெளியிட்ட அறிவிப்பு: தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம், பள்ளியின் தர உயர்வு, கட்டிடம் கட்ட திட்ட அனுமதி போன்றவற்றை அரசிடம் இருந்து பெற்றுத் தருவதாகக் கூறி சுமார் ரூ.100 கோடி வரை பணம் வசூலிக்கப்பட்டதாக தெரிகிறது. இந்த வழக்கில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகள் குறித்தும், சாட்சியங்களை சேகரித்தும் புலன் விசாரணை நடக்கிறது.

இந்த மோசடியால் பாதிக்கப்பட்ட தனியார் பள்ளி நிர்வாகத்தினர் சென்னை காவல் ஆணையர் அலுவலகம் அல்லது அங்கு செயல்படும் சென்னை மத்திய குற்றப்பிரிவு காவல் துறையை அணுகலாம். புகார் கொடுப்பவர்கள் குறித்த தகவல் ரகசியமாக வைக்கப்பட்டு, குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குடியாத்தம் அருகே, போலி நிறுவனம் தொடங்கி ரூ.2.47 கோடி ஜிஎஸ்டி மோசடி!

### – பாதிக்கப்பட்ட ஏழை விவசாயி புகார்

வேலூர் மாவட்டம், குடியாத்தம் அருகேயுள்ள வீரிசெட்டிபல்லியைச் சேர்ந்த பிரபாகர் (32) என்ற ஏழை விவசாயி ஆவார். ஆம்பூர் ஜிஎஸ்டி துறையிடமிருந்து இவரது பெயருக்கு ரூ.2,47,42,313 (வரி நிலுவை, வட்டி மற்றும் அபராதம் உட்பட) செலுத்தக் கோரி நோட்டீஸ் வந்துள்ளது.

இந்தத் தொகையை 7 நாட்களுக்குள் கட்ட வேண்டும், தவறும் பட்சத்தில் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தகரக் கொட்டகை வீட்டில் வசிக்கும் பிரபாகர், தன் பெயரில் எந்த ஒரு தொழிலும் செய்யவில்லை என விளக்கமளித்துள்ளார்.

யாரோ மர்ம நபர்கள் இவரது பான் (PAN) மற்றும் ஆதார் கார்டு போன்ற தனிப்பட்ட ஆவணங்களை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி 'ராஜு டிரேடர்ஸ்' என்ற போலி நிறுவனத்தைப் பதிவு செய்துள்ளனர்.

2023-2024 நிதியாண்டில் இந்த நிறுவனத்தின் பெயரில் பல கோடி ரூபாய் அளவிற்குப் போலிப் பரிவர்த்தனைகள் (Fake Invoices) செய்து ஜிஎஸ்டி வரி ஏய்ப்பு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயி பிரபாகர், ஆம்பூர் ஜிஎஸ்டி அதிகாரிகளைச் சந்தித்து முறையிட்டார். அவர்களின் அறிவுறுத்தலின்படி, தனது அடையாளம் திருடப்பட்டது குறித்து பரதரமி காவல் நிலையத்தில் (Paradarami Police Station) புகார் அளித்துள்ளார். இந்த மோசடியின் பின்னணியில் உள்ள குற்றவாளிகளைப் பிடிக்கப் காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

பான் கார்டு அடையாளத் திருட்டு மோசடிகளில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள நீங்கள் செய்யவேண்டியது:

உங்கள் பான் கார்டு மூலம் யாராவது கடன் வாங்கியுள்ளார்களா என்பதை அறிய CIBIL அல்லது Experian செயலிகள் மூலம் அடிக்கடி உங்கள் கடன் வரலாற்றைச் சரிபார்க்கவும்.




உங்களின் அனுமதியின்றி உங்கள் ஆதாரைப் பயன்படுத்தாமல் இருக்க, mAadhaar செயலி அல்லது UIDAI இணையதளம் மூலம் உங்கள் பயோமெட்ரிக்ஸை (Biometrics) லாக் செய்து வைக்கவும்.

எளிய கடன் (Easy Loans), பகுதி நேர வேலை (Part-time job) போன்ற கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பி முன்பின் தெரியாதவர்களிடம் பான், ஆதார் நகல்களை வாட்ஸ்அப்பில் அனுப்ப வேண்டாம்.

எங்கு நகல்களைக் கொடுத்தாலும், அதன் மேல் எதற்காகக் கொடுக்கப்படுகிறது (உதாரணமாக: "Only for Sim Card activation") என்று எழுதி, தேதியிட்டு கையொப்பமிட்டுக் கொடுங்கள்.

ஒருவேளை உங்கள் பான் கார்டு தவறாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது தெரியவந்தால், அதை வருமான வரித் துறையின் குறைகேள் போர்ட்டலில் (TIN-NSDL) உடனடியாகப் புகார் செய்ய வேண்டும்

# தவெக எம்.எல்.ஏ.விடம் ரூ.35 கோடி பேரம்!

## செந்தில் பாலாஜி ஆதரவாளர்கள் கைது!

தமிழக வெற்றிக் கழக எம்.எல்.ஏவிடம் ரூ. 35 கோடி வரை பேரம் பேசிய புகாரில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



செந்தில் பாலாஜி ரமேஷ் கார்த்தி

சட்டப்பேரவையில் தமிழக வெற்றிக் கழகத்தின் மீதான நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் திமுகவுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்றும், திமுகவுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை தொகுதி தவெக எம்எல்ஏ என். இளையராஜாவிடம் சிலர் பேரம் பேசியுள்ளனர்.

இதுதொடர்பாக தவெக எம்எல்ஏ என். இளையராஜா, சென்னை பெருநகர காவல் ஆணையர் ஏ.அமல்ராஜை சில நாள்களுக்கு முன்பு சந்தித்து புகார் மனு ஒன்றை அளித்திருந்தார்.

அந்த மனுவில் சிலர் தன்னை ரகசியமாக தொடர்பு கொண்டு திமுகவுக்கு மாறும்படியும், திமுகவுக்கு மாறினால் ரூ.35 கோடி தருவதாக கூறி அழைப்பதாகவும், தற்போது கட்சி மாறும்படி மிரட்டல் கொடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டு இருந்தார்.

தன்னை பணத்தாசை காட்டியும், மிரட்டியும் கட்சி மாற தூண்டும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படியும் அந்த மனுவில் இளையராஜா தெரிவித்து இருந்தார்.

இதனடிப்படையில் இந்த வழக்கில் தொடர்புடைய நபர்களை கைது செய்ய தனிப்படை அமைக்கப்பட்டது. இது தொடர்பாக தனிப்படை நடத்திய தீவிர விசாரணையில், சென்னை அரும்பாக்கத்தை சேர்ந்த யூடியூபர் திருநாவுக்கரசு என்பவரை போலீசார் கைது செய்தனர். விசாரணையில் அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில், திருச்சியைச் சேர்ந்த நரேஷ் சென்னை மேடவாக்கத்தைச் சேர்ந்த தியாகராஜன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

மூவரிடமும் நடத்தப்பட்ட விசாரணையில் இந்த வழக்கில் முன்னாள் திமுக அமைச்சரும், எம்எல்ஏவுமான செந்தில்பாலாஜிக்கு தொடர்பு இருப்பது தெரியவந்தது.

இதனடிப்படையில், செந்தில் பாலாஜிக்கு நெருக்கமான கரூர் ஈரோடு சாலையில் உள்ள கோதை நகரைச் சேர்ந்த நிதி நிறுவன அதிபரான அதிபன் ரமேஷ் மற்றும் ஈரோடு சாலையில் சக்தி மெஸ் என்ற பெயரில் உணவகம் நடத்தி வரும் கார்த்திக் இருவரையும் போலீசார் கைது செய்தனர். இருவரிடமும் போலீஸார் ரகசிய இடத்தில் வைத்து விசாரணை செய்து வருகின்றனர்.

முதல்வர் விஜய் தலைமையிலான ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கில், திமுகவைச் சேர்ந்தவர்கள் 20க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏக்களிடம் பேரம் பேசியுள்ளதாகதகவல்கள் வெளியாகி யிருக்கின்றன. எம்.எல்.ஏக்களுக்கு ரூ. 35 கோடி முதல் ரூ. 50 கோடி வரை முன்வந்ததாகவும் தகவல் தெரிவிக்கின்றன.

# திமுக மீதான மக்களின் அதிருப்தியே தவெகவின் வெற்றி!

## – விஜய்க்கு ஆதரவாக அண்ணாமலை




திமுக அரசுக்கு எதிராக மக்களிடையே கொழுந்துவிட்டு எரிந்த அதிருப்தி மனநிலையே விஜய்யின் விஸ்வரூப வெற்றிக்கு முக்கியக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். "அரசியலில் விஜய் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துவார் என எதிர்பார்த்தேன், ஆனால் கொங்கு மண்டலத்தில் கிடைத்த பிரம்மாண்ட ஆதரவால் இவ்வளவு பெரிய வாக்கு சதவீதத்தையும் வெற்றியையும் அவர் பெறுவார் என நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை" என அண்ணாமலை ஆச்சரியம் தெரிவித்துள்ளார்.

பணபலம் மற்றும் சாதியக் கட்டமைப்புகளை உடைத்தெறிய மக்கள் செல்வாக்கு மிக்க ஒரு சினிமா நட்சத்திரம் தேவைப்பட்ட நிலையில், விஜய் அந்த மாற்றத்தை நிகழ்த்திக் காட்டியுள்ளார் என்று பாராட்டியுள்ள அவர், அரசியலுக்குப் புதியவரான முதல் அமைச்சர் விஜய்க்குத் தனது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ளக் குறைந்தது ஒரு வருட கால அவகாசமாவது வழங்கப்பட வேண்டும் என்றும், விமர்சனங்கள் ஆக்கப்பூர்வமாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தேர்தலுக்கு முன்பு விஜய்யைக் கடுமையாக விமர்சித்துவிட்டு, அவர் வெற்றி பெற்றவுடன் பதவிகளுக்காகக் கூண்டோடு கட்சி தாவுபவர்களைக் கடுமையாகச் சாடியுள்ள அண்ணாமலை, இதுபோன்ற சந்தர்ப்பவாத அரசியலே தேவையற்ற இடைத்தேர்தல்களுக்கு வித்திடுவதாக வேதனை தெரிவித்துள்ளார். மேலும், தான் முன்னெடுத்து வரும் புதிய அரசியல் இயக்கம் குறித்துப் பேசிய அவர், "தற்போது எங்கள் இயக்கத்தில் 19 லட்சம் பேர் இணைந்துள்ளனர்; இந்த எண்ணிக்கை 50 லட்சத்தைத் தொட்ட பிறகே அரசியல் கட்சியாக மாறுவது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும்" என அதிரடியாக அறிவித்துள்ளார்.

தங்கள் இயக்கத்தின் பாதை தவெகவிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்றும், இளைஞர்கள், பெண்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களை உள்ளடக்கிய தூய்மையான அரசியலையே தாங்கள் முன்னெடுக்கப் போவதாகவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். அதேசமயம், "ஒருவேளை அதிமுக பாஜக தவெக ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து மெகா கூட்டணி அமைத்திருந்தால், அது திமுக மீண்டும் ஆட்சிக்கு வர வழிவகுத்திருக்கும்; தேர்தல் என்பது வெறும் எண்களின் கூட்டல் கழித்தல் அல்ல, மக்களுடனான அரசியல் 'கெமிஸ்ட்ரி'தான் வெற்றியைத் தீர்மானிக்கும்" என அண்ணாமலை உதிர்த்துள்ள அரசியல் தத்துவங்கள் தற்போது தமிழக அரசியல் வட்டாரத்தில் அனலைக் கிளப்பியுள்ளன.

# லஞ்சம் வாங்கும் போது கையும் களவுமாக பிடிபட்ட பெண் எஸ்.ஐ.க்கள்...



சென்னை திருமுல்லைவாயிலில் மசாஜ் சென்டர் நடத்த லஞ்சம் (மாமூல்) வாங்கிய பெண் சப்இன்ஸ்பெக்டர்கள் (எஸ்.ஐ.,க்கள்) பாக்கியலட்சுமி, இளவரசி ஆகிய இருவரை லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் கைது செய்துள்ளனர்.

சென்னை அம்பத்தூரைச் சேர்ந்த ஜெனிபர் என்பவர் திருமுல்லைவாயில் சி.டி.எச்., சாலை பகுதியில் அழகு நிலையம் மற்றும் 'ஸ்பா' மசாஜ் சென்டர் நடத்தி வருகிறார். அனுமதியின்றி ஸ்பா நடப்பதாகக் கூறி கடந்த ஜூன் 20ஆம் தேதி திருமுல்லைவாயில் எஸ்.ஐ. பாக்கியலட்சுமி தலைமையிலான போலீசார் அங்கு சோதனை நடத்தினர்.

மசாஜ் சென்டரை தொடர்ந்து நடத்த அனுமதிக்க வேண்டும் என்றால், மாதம் ₹20,000 மாமூல் தர வேண்டும் என எஸ்.ஐ. பாக்கியலட்சுமி மற்றும் மற்றொரு பெண் எஸ்.ஐ. இளவரசி ஆகியோர் ஜெனிபரிடம் வற்புறுத்தியுள்ளனர் .

லஞ்சம் கொடுக்க விரும்பாத ஜெனிபர் இதுகுறித்து லஞ்ச ஒழிப்புத்துறை (DVAC) போலீசாரிடம் புகார் அளித்தார்.

லஞ்ச ஒழிப்புத்துறையினரின் ஆலோசனையின்படி, ஜெனிபர் ரசாயனம் தடவிய பணத்தை பெண் எஸ்.ஐ.க்களிடம் கொடுத்தபோது, அங்கு மறைந்திருந்த அதிகாரிகள் இருவரையும் கையும் களவுமாகப் பிடித்துக் கைது செய்தனர் .

அரசு ஊழியராக இருந்து கொண்டு லஞ்சம் கோருதல், லஞ்சப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகிய குற்றங்களுக்காக லஞ்ச ஒழிப்புத்துறை (DVAC) போலீஸாரால் இவர்கள் மீது வழக்குப்பதிவு (FIR) செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சிறப்பு எஸ்.ஐ. அமுல் மற்றும் எஸ்.ஐ. பாக்கியலட்சுமி ஆகிய இருவரும் விசாரணைக்குப் பிறகு நீதிமன்ற நடுவர் (Magistrate) முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்படுவர் .

லஞ்ச வழக்கில் கையும் களவுமாகப் பிடிபட்டு, 48 மணி நேரத்திற்கு மேல் சிறைக்காவலில் இருக்கும் அரசு ஊழியர்கள் காவல் துறை விதிகளின்படி உடனடியாக சஸ்பெண்ட் (Suspension Order) செய்யப்படுவார்கள

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பின், இவர்கள் மீது காவல் துறை உயர் அதிகாரிகளால் தனியாகத் துறைரீதியான விசாரணை நடத்தப்பட்டு நிரந்தரப் பணிநீக்கம் வரை கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வாய்ப்புள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் எஸ்.ஐ.க்களின் வீடுகள் மற்றும் அவர்கள் பணிபுரிந்த காவல் நிலையப் பகுதிகளில் லஞ்ச ஒழிப்புத் துறையினர் கூடுதல் சோதனைகள் நடத்தி, வருமானத்திற்கு அதிகமான சொத்துகள் அல்லது இதர ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என ஆய்வு செய்வர்.

ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகள், புகார்தாரரின் வாக்குமூலம் மற்றும் சாட்சிகளின் அடிப்படையில் வலுவான குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டு ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

# அரசு அலட்சியத்தால் சிதைந்த இளைஞர்களின் அரசுப் பணி கனவு!






தமிழ்நாடு மின்சார வாரிய உதவி மின்பொறியாளர் (TNEB AE) பணி நியமனத்தில் அரசுப் போட்டித் தேர்வுகளுக்காகக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகப் பரவலான குற்றச்சாட்டுகளும் கண்டனங்களும் எழுந்துள்ளன.

பல்வேறு தேர்வர்கள், டிஎன்பிஎஸ்சி (TN-PSC) மற்றும் மின்பகிர்மானக் கழகத்தின் (TN-PDCL) நிர்வாகக் குளறுபடிகளே இதற்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டி தங்களின் கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளனர்.

கடந்த 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகத்தால் உதவி மின்பொறியாளர் (AE) பணியிடங்களுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக இந்தத் தேர்வு தள்ளிவைக்கப்பட்டு, பின்னர் 2022இல் திடீரென நிர்வாகக் காரணங்களைக் கூறி முழுமையாக ரத்து செய்யப்பட்டது.

எதிர்காலத் தேர்வுகள் அனைத்தும் TNP-SC மூலம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்ட போதிலும், அடுத்த 3 ஆண்டுகளுக்குப் புதிய அறி விப்புகள் ஏதும் முறையாக வெளியிடப்படவில்லை.

கடந்த 2024, ஜூலை 26 அன்று பொதுப்பணித்துறை (PWD) உதவி மின்பொறியாளர் பணியிடங்களுக்கான தேர்வு முடிவுகள் வெளியாகின.

இந்த முடிவுகள் வெளியாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக, முன்பு ரத்து செய்யப்பட்ட மின்வாரிய AE காலிப்பணி யிடங்களில் 195 இடங்களை, பொதுப்பணித்துறை தேர்வு முடிவுகளைக் கொண்டு நிரப்பப் போவதாக திடீர் அறிவிப்பு வெளியானது.

மின்வாரியத் தேர்வுக்காக பிரத்தியேகமாக 6 ஆண்டுகளுக்கும் மேலாகக் காத்திருந்த தகுதியான இளைஞர்களின் வாய்ப்பு இதனால் பறிக்கப்பட்டதாகக் குற்றம்சாட்டப்படுகிறது.

நிர்வாகத் தாமதங்கள் காரணமாக, 2025 இல் நடைபெற்ற TNPSC தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்ற பல தேர்வர்கள், வயது வரம்பைக் (Upper Age Limit) காரணம் காட்டி தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தேர்வு நடத்த அரசுத் தரப்பில் ஏற்பட்ட பல ஆண்டுகாலத் தாமதத்திற்கு, தேர்வர்களைப் பலியாக்குவது பெரும் அநீதி எனப் போராட்டங்கள் வெடித்துள்ளன.

ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) தேர்வுகளுக்கு வழங்கியது போல, பாதிக்கப்பட்ட மின்வாரியத் தேர்வர்களுக்கும் ஒருமுறை மட்டும் வயது வரம்பு தளர்வு (One-time Age Relaxation) வழங்க வேண்டும்.

தேர்வு நடைமுறைகள் தொடங்கிய பிறகு விதிகளையும் காலிப்பணியிடங்களையும் மாற்றுவது முறைகேடானது என்பதால், TNPSC மற்றும் TN-PDCLஇன் இந்த நடவடிக்கைகள் குறித்து அரசு வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும்.

எதிர்காலத்தில் தேர்வு அறிவிப்பு வந்த பிறகு, விதிகளை மாற்றி இளைஞர்களின் அரசுப் பணி கனவைச் சிதைக்கும் இத்தகைய குளறுபடிகளுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.



## சோதனை மேல் சோதனை

# த.வெ.க அரசின் 50 நாள் ஆட்சிப் பாதை!

தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாகப் பார்க்கப்பட்ட முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் த.வெ.க அரசு, ஆட்சிக் கட்டிலில் ஏறி தனது முதல் 50 நாட்களை நிறைவு செய்துள்ளது. "மாற்றம்" என்ற முழக்கத்தோடு ஆட்சியைப் பிடித்தாலும், இந்த 50 நாட்களில் சட்டம்ஒழுங்கு, நிர்வாகச் சீர்கேடு, மின்கட்டணப் புகார்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் தொடர் அரசியல் வியூகங்கள் எனப் பலமுனைத் தாக்குதல்களை இந்த இளம் அரசு எதிர்கொண்டு வருகிறது.

புதிய அரசு பொறுப்பேற்ற இந்த குறுகிய காலத்திற்குள், நிர்வாக ரீதியான சவால்களும் சட்டம்ஒழுங்கு குறைபாடுகளும் பிரதான விவாதப் பொருளாக மாறியுள்ளன. குறிப்பாக, விழுப்புரம் மற்றும் வடலூர் போன்ற பகுதிகளில் நேர்ந்த பல்வேறு விபத்துகள், மாவட்ட நிர்வாகங்களின் அலட்சியப் போக்கை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளன. மேலும், சமீபத்தில் நடந்த அமோனியா வாயு கசிவு விபத்து மற்றும் அதில் ஏற்பட்ட உயிரிழப்புகள், தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பில் புதிய அரசின் நிர்வாகத் தளர்வைக் காட்டுவதாக எதிர்க்கட்சியான திமுக கடுமையாக விமர்சித்து வருகிறது. டெல்டா பாசனத்திற்காக வழக்கமாக ஜூன் 12ல் திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை உரிய நேரத்தில் திறக்கப்படாதது, த.வெ.க அரசின் விவசாய மேலாண்மைக் குறைபாட்டிற்குச் சான்றாக முன்வைக்கப்படுகிறது.

கோடைக் காலத்தின் தாக்கமும், புதிய அரசு பொறுப்பேற்ற காலமும் ஒன்றாக அமைந்த நிலையில், தமிழகத்தின் பல பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்தடை மற்றும் மின்சாரக் கட்டுப்பாடு பொதுமக்களைப்

பெரிதும் அவதிக்குள்ளாக்கியுள்ளது. மின்சாரக் கட்டமைப்புப் பராமரிப்பில் நிலவும் சுணக்கம் மற்றும் மின் விநியோகச் சீர்கேடுகள் காரணமாகத் தொழிற்சாலைகளும், நெசவாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இது த.வெ.க அரசுக்கு எதிராகப் பொதுமக்கள் மத்தியில் எழும் தொடக்கக்கால அதிருப்தியாக உருவெடுத்துள்ளது.

"மக்களுக்கான பாதுகாப்பான அரசு" என்ற வாக்குறுதிக்கு சவாலாக, கடந்த சில வாரங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள் ஆங்காங்கே பதிவாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, தூத்துக்குடி த.வெ.க எம்.எல்.ஏ சரவணன் மீது எழுந்துள்ள பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு, ஆளுங்கட்சிக்கு மிகப்பெரிய அரசியல் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. தன் சொந்தக் கட்சி எம்.எல்.ஏ மீது நடவடிக்கை எடுக்க அரசு தயங்குவதாக எதிர்க்கட்சிகள் மற்றும் மகளிர் அமைப்புகள் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றன.

த.வெ.க அரசை உலுக்கி வரும் மிக முக்கிய விவகாரம், தமிழக சட்டப்பேரவையில் வெடித்துள்ள "குதிரை பேரம்" மற்றும் எம்.எல்.ஏக்கள் ராஜினாமா விவகாரமாகும். அதிமுக எம்.எல்.ஏக்கள் திடீரென ராஜினாமா செய்து வருவது, த.வெ.கவில் இணையப் போவதாக வெளியாகும் தகவல்கள் ஒருபுறமிருக்க, மறுபுறம் த.வெ.க அரசை கவிழ்க்க எதிர்க்கட்சிகள் சதி செய்வதாகப் புகார்கள் எழுந்துள்ளன.

த.வெ.கவின் உத்தங்கரை எம்.எல்.ஏ இளையராஜா, த.வெ.க சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகரனுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர தமக்கு ₹35 கோடி பேரம் பேசப்பட்டதாக சென்னை காவல்துறையில் பரபரப்பு புகார் அளித்துள்ளார்.

இந்த சதியின் பின்னணியில் திமுக மற்றும் அதன் முக்கியப் புள்ளிகள் இருப்பதாக த.வெ.க தரப்பில் குற்றம் சாட்டப்பட்டாலும், முதலமைச்சர் விஜய் குதிரை பேர அரசியலை ஊக்குவிப்பதாக உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட திமுக தலைவர்கள் திருப்பி அடித்து வருகின்றனர்.

முதலமைச்சர் விஜய் முக்கிய மக்கள் பிரச்சினைகளில் மௌனம் காப்பதாகக் கூறி,



ராஜினாமா செய்த அதிமுக எம்எல்ஏக்கள் தவெகவில் இணைப்பு

புதிய த.வெ.க அரசின் முதல் சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே திமுக எம்.எல்.ஏக்கள் தங்களது சட்டையில் "வாயைத் திறங்க சிஎி!" (Open your mouth CM!) என்ற கருப்பு பேட்ஜ்களை அணிந்து அதிரடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பரந்தூர் விமான நிலைய எதிர்ப்புப் போராட்டம், த.வெ.க அரசின் கொள்கைகளுக்கு எதிரான பல்வேறு விவசாய மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளின் தொடர் போராட்டங்கள் எனத் தமிழகத்தின் தற்போதைய அரசியல் களம் போராட்டக் களமாக மாறியுள்ளது.

நிர்வாகத்தை டிஜிட்டல் மயமாக்குதல், 'வெற்றி தமிழ்நாடு சூப்பர் ஆப்', 300 புதிய பேருந்துகள் அறிமுகம் என முதலமைச்சர் விஜய் சில ஆக்கப்பூர்வமான முயற்சிகளைத் தொடங்கியிருந்தாலும், இந்த 50 நாட்களில் சட்டம்ஒழுங்கு மற்றும் அரசியல் குதிரை பேரச் சவால்கள் அரசை தற்காப்பு நிலைக்குத் தள்ளியுள்ளன. தனது திரையுலகப் பிம்பத்தைத் தாண்டி, ஒரு தேர்ந்த நிர்வாகியாக முதலமைச்சர் விஜய் இந்த சவால்களை எப்படிக் கையாளப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்!



திருவள்ளூர் அருகே இறால் பதப்படுத்தும் ஆலையில் அமோனியா வாயு கசிவால் ஏற்பட்ட உயிரிழப்பு



# குறைந்த விலைக்குத் தங்கம் வாங்கித் தருவதாகக் கூறி ரூ.32.3 லட்சம் மோசடி!

ஹைதராபாத் அத்தப்பூர் பகுதியைச் சேர்ந்தவர் பல்லபு சுரேஷ்குமார் (வயது 34). இவர் தனது உடல் முழுவதும் கிலோ கணக்கில் தங்க நகைகளை அணிந்து, வெள்ளை நிற ஆடைகளுடன் வலம் வந்ததால் சமூக ஊடகங்களில் 'கோல்டுமேன் சூர்யா பாய்' என்று மிகவும் பிரபலமடைந்தார். சினிமா மற்றும் இன்ஸ்டாகிராம் ரீல்ஸ்களில் சிறிய கதாபாத்திரங்களில் நடித்து வந்த இவர், தன்னைத் தெலுங்கானா முதலமைச்சர் ஏ. ரேவந்த் ரெட்டி மற்றும் ஹைதராபாத் மாநகரக் காவல் ஆணையர் வி.சி. சஜ்ஜனார் ஆகியோருக்கு மிகவும் நெருக்கமானவர் எனப் பொதுமக்களிடம் காட்டி நம்ப வைத்துள்ளார். இவரது இந்தத் தோற்றத்தையும், செல்வாக்கையும் உண்மை என்று நம்பிய கிருஷ்ண சாரி என்பவரிடம், சந்தை விலையை விட 20% குறைவான விலையில் துபாய் மற்றும் கத்தாரில் இருந்து 1.5 கிலோ 24 கேரட் தங்கம் வாங்கித் தருவதாகக் கூறி ஒரு கோடி ரூபாய்க்குப் பேசி ஆசை காட்டியுள்ளார்.

முழுப் பணத்தையும் உடனடியாகத் தர இயலாது என்று கிருஷ்ண சாரி கூறியதால், முதற்கட்டமாக முன்பணத்தை மட்டும் கொடுத்துவிட்டு தங்கத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும், பின்னர் அதனை விற்று லாபம் ஈட்டி மீதிப் பணத்தைத் தருமாறும் சுரேஷ்குமார் மூளைச்சலவை செய்துள்ளார். இதனை நம்பிய கிருஷ்ண சாரி, ஹிமாயத்நகரில் உள்ள ஒரு சிற்றுண்டிச் சாலை மற்றும் பல்வேறு இடங்களில் வைத்து, மூன்று தவணைகளாக ரூ.27 லட்சம் ரொக்கப் பணமாகவும், ரூ.5.3 லட்சம் மதிப்புள்ள தங்க ஆபரணங்களாகவும் சேர்த்து மொத்தம் ரூ.32.3 லட்சத்தை சுரேஷ்குமாரிடம் ஒப்படைத்துள்ளார். ஆனால், பணத்தைப் பெற்றுக்கொண்ட சுரேஷ்குமார், வாக்குறுதி அளித்தபடி தங்கத்தையும் கொடுக்காமல், வாங்கிய பணத்தையும் திருப்பிக் கொடுக்காமல் காலம் தாழ்த்தி ஏமாற்றி வந்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் அவரை நேரில் சந்தித்து நெருக்கடி கொடுத்தபோது, அவர்களிடம் இருந்து

தப்பிக்க ரூ.20 லட்சத்திற்கான ஒரு காசோலையையும், ரூ.10 லட்சம் மதிப்புள்ள 3 ஐபோன்களையும் கொடுத்துச் சமாதானம் செய்துள்ளார். ஆனால், அதன் பின்னர் ஒரு கும்பலை ஏவி மிரட்டி, தான் கொடுத்த காசோலையையும், ஐபோன்களையும் சுரேஷ்குமார் பறித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.



இதற்கிடையே, தன் மீது தவறு வராமல் இருக்க, பாதிக்கப்பட்டவர்களே தன்னை மிரட்டிப் பொருட்களைப் பறித்துச் சென்றதாக அத்தப்பூர் காவல் நிலையத்தில் சுரேஷ்குமார் ஒரு போலிப் புகாரை அளித்தார். ஆனால், காவல்துறையினர் நடத்திய முதற்கட்ட விசாரணையில், சுரேஷ்குமார் காவல்துறையினரையே திசைதிருப்ப முயன்றதும், அவர் செய்த பெரும் மோசடிகளும் அம்பலமாகின.

இதையடுத்து, அவர் மீது பாரதிய நியாய சன்ஹிதா (BNS) சட்டப்பிரிவுகள் 318(4) (மோசடி), 316(2) (நம்பிக்கை துரோகம்) ஆகியவற்றின் கீழ் நாராயணகுடா போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

வழக்குப்பதிவு செய்யப்பட்டதை அறிந்து ஹைதராபாத்தில் இருந்து தப்பியோட முயன்ற சுரேஷ்குமாரை, ஷாத்நகர் பகுதியில் வைத்து காவல்துறையினர் அதிரடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

ஏற்கனவே வருமான வரித்துறை நடத்திய சோதனையில், இவர் 'கோல்டுமேன்' எனப் பறைசாற்றிக் கொள்ள அணிந்திருந்த ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான நகைகள் அனைத்தும் வெறும் 3 லட்சம் ரூபாய் மதிப்புடைய கில்ட் (ரோல்டு கோல்டு) நகைகள் என்பது வெளிச்சத்திற்கு வந்தது குறிப்பிடத்தக்கது. சுரேஷ்குமார் இதேபோன்று இன்னும் எத்தனை நபர்களை ஏமாற்றியுள்ளார் என்பது குறித்து காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மனிதர்களை மட்டுமல்ல அலைபேசிகளையும் பாதிக்கும் வெயிலின் தாக்கம்...

வெயிலின் தாக்கம் மனிதர்களை மட்டு வெயிலின் மல்ல அறிதிறன் பேசிகளையும் பாதிக்கிறது. கடும் வெப்பத்தால் பேட்டரியில் உள்ள சார்ஜ் தானாகவே குறைந்துவிடுவதால், பலர் கைப்பேசியின் பயன்பாடில்லாமல் அவதிக்குள்ளாகின்றனர்.

கைப்பேசியில் உள்ள லித்தியம் ஐயன் பேட்டரிகள் அதிக பட்சமாக 32 டிகிரி செல்சியஸ் பயன்பாட்டுக்காக உருவாக்கப் பட்டவை. வெப்பம் கூடும்போது, திரை யின் வெளிச்சம் குறைவதும், செயல்திறன் குறைவதும் இயல்புதான்.

5ஜி சிக்னல் இல்லாத இடத் தில் அந்தச் சேவையை கைப் பேசி தானாகத் தேடிக் கொண் டிருக்கும். இதனால் பேட்டரி தொடர்ந்து குறையும்.

கார்களில் வெயில் படும் இடங்களில் கைப்பேசியை வைப்பது, கடும் வெப்ப நிலையில் கேம்கள், விடியோ அழைப்புகள், தொடர் நேரலைகளை நீண்ட நேரம் காண்பது ஆகியவை கைப்பேசியைச் சூடாக்கி, பேட்டரி சேமிப்பை உடனடியாகக் குறைத்து



இதைத் தவிர்க்க புளூடூத், ஹாட்ஸ்பாட், ஜிபிஎஸ் போன்ற சேவைகளைப் பயன்படுத்த வில்லை என்றால் அவற்றை ஆப் செய்து வைக் கலாம், வெப்பம் குறைவான இடத்தில் வைத்து சார்ஜ் செய்யலாம், ஏர்பிளேன் மோடில் சிறிது

நேரம் மாற்றினால், கைப்பேசியின் வெப்பம் குறையும். இதுபோன்ற சிறு செயல்கள் கைப் பேசியின் பேட்டரியை நீண்ட நேரம் சேமிக்க உதவவும், வெப்பத்தால் சூடாகாமல் இருக்க வும் உதவும்.



# வேலூர் கோட்டையும் அதன் வரலாற்றுப் பின்னணியும்!

தமிழ்நாட்டின் பாலாற்றின் கரையில் அமைந்துள்ள வேலூர் நகரம், தென்னிந்திய வரலாற்றில் போர்களுக்கும், வீரத்திற்கும், அரசியல் மாற்றங்களுக்கும் சாட்சியாக விளங்கும் ஒரு உன்னதமான வரலாற்றுப் பூமியாகும். பல்லவர்கள், சோழர்கள், விஜயநகர அரசர்கள், மராட்டியர்கள், ஆற்காடு நவாப்கள் மற்றும் பிரிட்டிஷார் எனப் பல வரலாற்றுப் பேரரசுகளின் ஆதிக்க மையமாக இந்நகரம் திகழ்ந்துள்ளது.

வேலூரின் மிக முக்கிய அடையாளமாகத் திகழ்வது கம்பீரமாக வீற்றிருக்கும் வேலூர் கோட்டை ஆகும். 16ஆம் நூற்றாண்டில் (சுமார் 1526 1595 காலகட்டத்தில்) விஜயநகரப் பேரரசின் சின்ன பொம்மி நாயக்கர் மற்றும் திம்மா ரெட்டி நாயக்கர் ஆகியோரால் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டை கட்டப்பட்டது.

133 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இக்கோட்டையைச் சுற்றி 191 அடி அகலமும், 29 அடி ஆழமும் கொண்ட ஒரு பிரம்மாண்ட அகழி உள்ளது. முற்காலத்தில் எதிரிகளிடமிருந்து கோட்டையைப் பாதுகாக்க இந்த அகழியில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட முதலைகள் வளர்க்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

ஆற்காடு, சித்தூர் குவாரிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட உறுதியான கருங்கற்களைக் கொண்டு, தென்னிந்தியாவின் ராணுவக் கட்டடக்கலைக்கு மிகச்சிறந்த உதாரணமாக இக்கோட்டை வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒரே ஒரு நுழைவாயிலைக் கொண்ட இக்கோட்டையினுள் விஜயநகரக் கட்டடக்கலை பாணியில் அமைந்த புகழ்பெற்ற ஜலகண்டேஸ்வரர் கோவில், இஸ்லாமியர்களின் வழிபாட்டிற்கான மசூதி மற்றும் ஆங்கிலேயர்கள் கட்டிய தேவாலயம் ஆகிய மூன்றும் அமைந்து சர்வ மத நல்லிணக்கத்திற்குச் சான்றாக விளங்குகின்றன.

வியூக ரீதியாக மிக வலிமையான இடத்தில் அமைந்திருந்ததால், வேலூர் கோட்டையைக் கைப்பற்றப் பல அரசுகள் போட்டியிட்டன.

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, 17ஆம் நூற்றாண்டில் இக்கோட்டை பிஜப்பூர் சுல்தான்களின் வசமானது. அதன் பின்னர், மராட்டிய மன்னர் சிவாஜியின் படைகள் 4.5 மாதங்கள் முற்றுகையிட்டு

இக்கோட்டையைக் கைப்பற்றின.

தொடர்ந்து டெல்லியின் முகலாயப் பேரரசு, ஆற்காடு நவாப்கள் எனப் பல கைகள் மாறி, இறுதியாக 1760களில் இக்கோட்டை ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் (British East India Company) முதன்மை ராணுவத் தளமாக மாறியது.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில், 1857 ஆம் ஆண்டு நடந்த சிப்பாய் கலகமே முதல் போர் என்று பலராலும் அறியப்படுகிறது. ஆனால், அதற்கு அரை நூற்றாண்டிற்கு முன்பே, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இந்திய மண்ணில் வெடித்த முதல் பெரும் புரட்சி 1806 ஜூலை 10ல் நடந்த வேலூர் சிப்பாய் புரட்சி ஆகும்.



பிரிட்டிஷ் தளபதி ஜான் கிராடக் கொண்டு வந்த புதிய ராணுவ உடைக் கட்டுப்பாடுதான் இந்த விபரீதப் புரட்சிக்கு வித்திட்டது. இந்து சிப்பாய்கள் நெற்றியில் திலகமிடக் கூடாது என்றும், முஸ்லிம்கள் தாடி வைக்கக் கூடாது என்றும், மாட்டுத்தோலால் ஆன தொப்பியை (Turban) அணிய வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்பட்டனர். இது சிப்பாய்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தியது.

1799 ஸ்ரீரங்கப்பட்டினப் போரில் திப்பு சுல்தான் கொல்லப்பட்ட பிறகு, அவரது மகன்களும் குடும்பத்தினரும் இந்த வேலூர் கோட்டையில்தான் ஆங்கிலேயர்களால் சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

ஜூலை 9, 1806 அன்று திப்பு சுல்தானின் மகளுக்குக் கோட்டைக்குள் திருமணம் நடைபெற்றது. அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திய இந்தியச் சிப்பாய்கள், ஜூலை 10 அதிகாலையில் கோட்டையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, ஆங்கிலேய அதிகாரிகளைச் சுட்டுக் கொன்றனர். திப்பு சுல்தானின் கொடி கோட்டையின் உட்சுவரில் ஏற்றப்பட்டு, அவரது மகன் ஃபதே ஹைதர் மன்னராகப் பிரகடனப்படுத்தப்பட்டார்.

பிரிட்டிஷாரின் ஒடுக்குமுறை: இந்தச் செய்தி ஆற்காட்டில் இருந்த பிரிட்டிஷ் கர்னல் கில்லெஸ்பிக்கு எட்டியது. அவர் பெரும் பீரங்கிப் படைகளுடன் வந்து கோட்டை கதவுகளைத் தகர்த்து, கொடூரமான முறையில் புரட்சியை ஒடுக்கினார். இந்த ஒரு நாள் போரில் 800க்கும் மேற்பட்ட இந்தியச் சிப்பாய்கள் வீர மரணமடைந்தனர்.

வேலூர் கோட்டை ஆங்கிலேயர்களின் மிக முக்கியமான அரசியல் சிறைக்கூடமாகப் பயன்படுத்தப்பட்டது. திப்பு சுல்தானின் வாரிசுகள் இங்குச் சிறை வைக்கப்பட்டனர் (புரட்சிக்குப் பின் அவர்கள் கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டனர்).

இலங்கையின் கண்டியரசின் கடைசி தமிழ் மன்னனான ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் ஆங்கிலேயர்களால் தோற்கடிக்கப்பட்டு, தனது இறுதிக்காலத்தை இந்த வேலூர் கோட்டைச் சிறையில்தான் கழித்தார். பிற்காலத்தில் இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது மூதறிஞர் இராஜாஜி உட்படப் பல முக்கியத் தலைவர்கள் வேலூர் மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வேலூர் என்பது வெறும் வெயில் நகரம் மட்டுமல்ல; அது இந்திய சுதந்திர வேள்விக்குத் தன்னுயிரைத் தந்து முதன்முதலில் வித்திட்ட வீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்ட வரலாற்றுப் பூமி! இன்று நவீன மருத்துவத்திற்கும் கல்விக்கும் உலகளவில் புகழ்பெற்றிருக்கும் இந்நகரம், தனக்குள்ளே புதைத்து வைத்திருக்கும் வரலாற்றுச் சுவடுகள் என்றும் அழியாதவை.



திப்பு சுல்தான்

# ஜவ்வாது மலையை அச்சுறுத்தும் அதானி மின் உற்பத்தி திட்டம்!

## – கொதிக்கும் சமூக ஆர்வலர்கள்

தமிழகத்தில் இயற்கை எழில் கொஞ்சும் மலைப் பிரதேசங்களில் ஒன்றான ஜவ்வாது மலையில், கார்ப்பரேட் நிறுவனமான அதானி குழுமத்தின் சார்பில் அமையவிருக்கும் 1,800 மெகாவாட் கொள்ளளவு கொண்ட நீரேற்றுப் புனல் மின் நிலையம் (Pumped Storage Hydroelectric Project) தற்போது பெரும் விவாதப் பொருளாக மாறியுள்ளது. முந்தைய திமுக ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், தற்போது புதிதாகப் பொறுப்பேற்றுள்ள முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக (தவெக) அரசின் கீழ் கொள்கை ரீதியான மற்றும் சுற்றுச்சூழல் ரீதியான பல்வேறு கேள்விகளை எதிர்கொண்டு வருகிறது.

கடந்த 2024 உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், தமிழ்நாட்டில் அடுத்த 5 ஆண்டுகளில் மூன்று நீரேற்றுப் புனல் மின் நிலையங்களை அமைக்க அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் ₹24,500 கோடி முதலீட்டு ஒப்பந்தம் செய்தது. அதன் ஒரு பகுதியாக, வேலூர் மாவட்ட எல்லைக்குட்பட்ட ஜவ்வாது மலையின் அரசம்பட்டு காப்புக்காடு பகுதியில் 1,800 மெகாவாட் திறனில் மின் நிலையம் அமைக்க, அதானி ஹைட்ரோ எனர்ஜி நிறுவனத்திற்குத் தமிழக பசுமை எரிசக்திக் கழகம் (TNGECL) ஒப்புதல் வழங்க விண்ணப்பித்துள்ளது. அரசம்பட்டு மலைப்பகுதியில் மேலணையும் (Upper Reservoir), மலையடிவாரத்தில் கீழணையும் (Lower Reservoir) கட்டி, அவற்றுக்கிடையே தண்ணீரைச் சுழற்சி செய்வதன் மூலம் மின்சாரம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான பாலாற்று நீர் விரிஞ்சிபுரத்திலிருந்து குழாய்கள் மூலம் கொண்டு வரப்படவுள்ளது.

காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சாரம் கிடைக்காத இரவு நேரங்கள் அல்லது மின் தேவை மிக அதிகமாக இருக்கும் (றிமீணீளீ பிஷீஹுக்ஷீஉ) நேரங்களில், இந்த நீரேற்று மின் உற்பத்தி உடனடியாக மின்சாரத்தை வழங்கி மின் தட்டுப்பாட்டைப் போக்கும்.

சுமார் ₹10,000 கோடி மதிப்பீட்டிலான



அதானி

இந்த மெகா திட்டத்தால், கட்டுமானக் காலத்தில் உள்ளூர் மக்களுக்குப் தற்காலிக வேலைவாய்ப்புகளும், உள்கட்டமைப்பு மேம்பாடும் கிடைக்கும் என நம்பப்படுகிறது.

இத்திட்டத்திற்காகக் கையகப்படுத்தப்படவுள்ள 337.452 எக்டேர் நிலப்பகுதியில், 228.352 எக்டேர் பகுதி அடர்ந்த அரசம்பட்டு காப்புக்காடாகும். இதனால் ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்பட்டு, அரிய வகை வன உயிரினங்களின் வாழ்விடங்கள் அழியும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

மலையடிவாரத்தில் அமையவுள்ள கீழணையால், புவிசார் குறியீடு பெற்ற 'இலவம்பாடி முள் கத்தரிக்காய்' விளையும் விவசாய நிலங்களும், தோட்டப்ப யிர்களும் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தின் விலை யூனிட்டுக்கு ₹9.10 என மதிப்பிடப்பட்டுள்ளது. அதானி நிறுவனம் இதனுடன் லாபம் வைத்து அரசுக்கு விற்கும்போது யூனிட் ₹10ஐத் தாண்டும். ஆனால், சூரிய ஆற்றல் மூலம் வெறும் ₹3-க்கே மின்சாரம் தயாரிக்க முடியும் என்பதால் இது அரசுக்கு பெரும் பொருளாதாரச் சுமையாகும்.

தமிழகத்தில் அண்மையில் ஆட்சிப் பொறுப்பேற்ற தவெக அரசு, கார்ப்பரேட் நிறுவனங்களின் ஏகபோக ஆதிக்கத்திற்கு எதிராகவும், மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதிலும் உறுதியான போக்கைக் காட்டி வருகிறது.

விவசாயிகள் மற்றும் சூழலியல் பக்கம்: ஏற்கனவே எதிர்க்கட்சியாக இருந்தபோது, திருவண்ணாமலை மேல்மா சிப்காட் திட்டத்தை விவசாய நிலங்களுக்காகக் கடுமையாக எதிர்த்து தவெக தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. "விவசாய நிலங்களையும் நீர்நிலைகளையும் அழிக்கும் எந்தவொரு திட்டத்தையும் அனுமதிக்க மாட்டோம்" என்பதே முதலமைச்சர் விஜய்யின் தாரக மந்திரமாக உள்ளது.

அண்மையில் தான், பொதுமக்களுக்குப் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தும் என்ற காரணத்திற்காக, அதானி குழுமத்திற்கு வழங்கப்பட்டிருந்த ₹20,000 கோடி மதிப்பிலான 'ஸ்மார்ட் மீட்டர்' (Smart Meter) டெண்டரை முதலமைச்சர் விஜய் அதிரடியாக ரத்து செய்தார்.



முதல்வர் விஜய்



பூவுலகின் நண்பர்கள்
சுந்தர்ராஜன்

ஜவ்வாது மலை அதானி மின் திட்டம் சூழலியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தமிழ்நாட்டிற்குப் பாதகமாக இருப்பதாகப் 'பூவுலகின் நண்பர்கள்' போன்ற அமைப்புகள் புதிய அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளன. ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தைப் போலவே, பொதுமக்களின் வரிப்பணமும் இயற்கை வளமும் கார்ப்பரேட் கைகளுக்குச் செல்வதைத் தடுக்க, இந்த ஜவ்வாது மலைத் திட்டத்தையும் தவெக அரசு தீவிரமாக மறுபரிசீலனை செய்து வருவதாகக் கோட்டை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வளர்ச்சி என்ற பெயரில் இயற்கையை அழிப்பதையும், அதிக விலைக்கு மின்சாரம் வாங்குவதையும் ஏற்க முடியாது என்ற மக்களின் குரலுக்கு, தவெக அரசு முக்கியத்துவம் அளிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. கார்ப்பரேட் லாபமா? அல்லது இயற்கை வளமா? என்ற இந்த சமரில், புதிய அரசு மக்களின் உரிமைகாக்கும் இறுதி முடிவை எடுக்கும் என்பதே தற்போதைய அரசியல் சூழல் உணர்த்தும் உண்மையாகும்.

# பிரிட்டனை வாட்டி வதைக்கும் வெயில்!



## அதீத வெப்பத்தால் உருகும் சாலைகள்

பொதுவாக நம்ம ஊரில் கோடைக் காலத்தில் வெப்பம் படுத்தி எடுக்கும். மக்கள் வெளியே செல்லக்கூட முடியாத சூழலே இருக்கும். 42 டிகிரி வரை தமிழகத்தில் வெப்பம் போய் இருக்கிறது. இந்தியாவின் ஓரிரு பகுதிகளில் இன்னுமே மோசமாக 45 டிகிரி வரை கூட வெப்பம் போய் இருக்கிறது. ஆனால், இவ்வளவு வெப்பம் அடித்தாலும் உள்கட்டமைப்பு சேதம் அடைந்தது இல்லை.

ஆனால், இப்போது பிரிட்டன் நாட்டில் 40 டிகிரி வெப்பத்திற்கே சாலைகள் உருகிவிடுகிறதாம். பல உள்கட்டமைப்பு சேதம் அடைகிறதாம். இது தொடர்பான வீடியோக்களும் இணையத்தில் பரவி வருகிறது. இந்தியாவில் எதுவுமே ஆகாமல் இருக்கும் சாலைகள் பிரிட்டனில் மட்டும் ஏன் பாதிக்கப்படுகிறது என்பதே மக்களின் கேள்வியாக இருக்கிறது.

இந்த வீடியோவை வைத்து சிலர், சாலைகளின் தரம் குறித்துப் பேசி வருகிறார்கள். ஆனால், விஷயம் அது இல்லை. எப்போதும் ஒரு இடத்தில் சாலை அமைக்கும்போது அந்த பகுதியின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்பவே சாலைகளை அமைப்பதற்கானப் பொருட்களைத் தேர்வு செய்வார்கள். பிரிட்டன் போன்ற நாடுகளில் நமது நாட்டை விடப் பல மடங்கு குளிர் அதிகமாக இருக்கும். எனவே, அந்த கடும் குளிரைத் தாங்கும் வகையிலேயே சாலைகள் அமைக்கப்படும். இந்த கலவைகளில் தார் மற்றும் மிக நுண்ணிய ஜல்லிக்கற்கள் அதிக அளவில் சேர்க்கப்படுவதால், சாலையின் பரப்புக்கு நெகிழ்வுத்தன்மை கிடைக்கிறது. இதனால் குளிர்காலத்தில் இந்த சாலைகளில் பெரிய பாதிப்பு ஏற்படாது..

ஆனால், வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் போது பிரச்சினை ஏற்படுகிறது. 40 டிகிரி செல்சியஸை தாண்டும்போது, தார் உருக தொடங்குகிறது. இதனால் கனரக வாகனங்கள் செல்லும்போது, சாலை கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. பிரிட்டன் நாட்டில் வழக்கமாக எந்த வெப்பம் இருக்குமோ.. அதை மனதில் வைத்தே சாலைகளை அமைப்பார்கள். ஆனால், இந்த முறை அதீத வெப்பம் நிலவுவதால் இப்படி சாலையே உருகிவிட்டது.

இந்தியாவை பொறுத்தவரை இங்கு வெயில் காலமே பல மாதங்கள் நீடிக்கும். இதைக் கருத்தில் கொண்டு MT-30 (VG-30) மற்றும் MT-40 (VG-40) போன்ற கடினமான தார் வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை வெப்பம் கணிசமாக உயரும்போது கூட தங்களின் வலிமையைத் தக்க வைத்துக் கொள்கின்றன. மேலும், இந்தியச் சாலைக் கலவைகளில் பெரிய அளவிலான ஜல்லிக்கற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது கடுமையான வெப்பத்திலும் சாலையின் மேற்பரப்பை நிலையாக வைத்திருக்க உதவுகிறது.

எனவே, இது தரத்தைப் பற்றியது இல்லை.. ஐரோப்பிய சாலைக் கட்டமைப்பு என்பது உறைபனி குளிர்காலத்தைத் தாங்கும் வகையில் போடப்பட்டவை.. மறுபுறம் இந்தியச் சாலைகள் இயல்பாகவே வெப்பத்தைத் தாங்கும் வகையில் போடப்பட்டவை. இதன் காரணமாகவே அதீத வெப்பத்தைப் பிரிட்டன் சாலைகளால் தாங்க முடியவில்லை!

# வைஃபை
## பாதுகாப்பாக பயன்படுத்துவது எப்படி?



வைஃபை (Wi-Fi) என்பது நவீன தகவல் தொடர்பின் மிக முக்கியமான மற்றும் வியக்கத்தக்க ஒரு கண்டுபிடிப்பு ஆகும். கம்பி இல்லாமலேயே காற்றில் தகவல்களைப் பரிமாறும் இந்தத் தொழில்நுட்பம் நம் அன்றாட வாழ்க்கையை முழுமையாக மாற்றியமைத்துள்ளது.

ரேடியோ அலைகள் (Radio Waves) மூலம் தரவுகள் அனுப்பப்படுகின்றன. பொதுவாக 2.4 GHz மற்றும் 5 GHz அதிர்வெண்களில் இது செயல்படுகிறது. ரவூட்டர் (Router) டிஜிட்டல் சிக்னல்களை ரேடியோ அலைகளாக மாற்றுகிறது. மொபைல், லேப்டாப் போன்ற சாதனங்கள் அந்த அலைகளை மீண்டும் தரவுகளாக மாற்றுகின்றன. கம்பிகளின் தேவையின்றி வீட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் இணையத்தைப் பயன்படுத்தலாம். டிவி, விளக்குகள், ஏசி போன்ற பல சாதனங்களை ஒன்றாக இணைக்க உதவுகிறது.

ஆன்லைன் கல்வி, வீட்டிலிருந்தே வேலை (Work from Home) சாத்தியமாகியுள்ளது. வணிக நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களில் அதிவேகத் தொடர்பு எளிதாகியுள்ளது.

ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான சாதனங்களை வேகம் குறையாமல் இணைக்க முடியும். *1940*களில் நடிகை ஹெடி லாமர் (Hedy Lamarr) கண்டுபிடித்த 'Frequency Hopping' தொழில்நுட்பமே இதற்கு அடித்தளம். *1971* இல் ஹவாய் பல்கலைக்கழகத்தில் 'ALOHANET' என்ற கம்பி இல்லா நெட்வொர்க் உருவாக்கப்பட்டது. *1992* இல் ஆஸ்திரேலியாவின் CSIRO அமைப்பைச் சேர்ந்த ஜான் ஓ'சுல்லிவன் (John O'Sullivan) குழுவினர் இதற்கான முக்கிய காப்புரிமையைப் பெற்றனர்.

*1997* இல் 802.11 என்ற முதல் கம்பி இல்லா தரநிலை (Standard) வெளியிடப்பட்டது. *1999* இல் 'Wireless Ethernet Compatibility Alliance' (தற்போது Wi-Fi Alliance) என்ற அமைப்பு இதற்கு "Wi-Fi" எனப் பெயரிட்டது.

WEP (Wired Equivalent Privacy): *1999* இல் அறிமுகமானது. தற்போது இது மிகவும் பலவீனமானது, எளிதில் ஹேக் செய்யக்கூடியது. WPA (Wi-Fi Protected Access): WEP இன் குறைகளைத் தீர்க்க *2003* இல் தற்காலிகமாக கொண்டு வரப்பட்டது.

WPA2: *2004* இல் அறிமுகம் செய்யப்பட்டது. AES (Advanced Encryption Standard) குறியாக்கத்தைப் பயன்படுத்துகிறது. இன்றுவரை பெரும்பாலான வீடுகளில் இதுவே பயன்பாட்டில் உள்ளது.

WPA3: *2018* இல் அறிமுகமான அதிநவீன பாதுகாப்பு முறை. பொது வைஃபை நெட்வொர்க்குகளிலும் கூட மிகச் சிறந்த பாதுகாப்பை இது வழங்குகிறது. ரவூட்டருடன் (Router) வரும் இயல்புநிலை (Default) பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை உடனே மாற்ற வேண்டும்.

உங்கள் ரவூட்டர் அமைப்புகளில் (Settings) பாதுகாப்பு முறையை WPA2 அல்லது WPA3 ஆக மாற்றவும். ரவூட்டரின் மென்பொருளை (Firmware) அவ்வப்போது புதுப்பிப்பது ஹேக்கர்களிடமிருந்து பாதுகாக்கும்.





# குழந்தைகளுக்கே AI பாடத்திட்டம்!

## – உலகத்திற்கே வழிகாட்டும் சீனா

செயற்கை நுண்ணறிவு (AI) யுகத்திற்கு ஏற்ப, சீனா தனது கல்வி முறையில் மிகப்பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பொருளாதாரத் தேவைகள் மற்றும் வேலைவாய்ப்புச் சந்தைக்கு ஏற்ப மாணவர்களைத் தயார்படுத்த இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பழைய படிப்புகளுக்கு முற்றுப்புள்ளி: 2021 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில், தற்போதைய காலத்திற்கு ஒவ்வாத சுமார் 12,200 இளங்கலை பட்டப்படிப்புகள் பல்கலைக்கழகங்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

வேலைவாய்ப்புகள் குறைந்த மற்றும் கிமி கருவிகளால் எளிதாகச் செய்யப்படக்கூடிய கலை (Arts), மொழியியல், மனிதநேயம் (Humanities), மேலாண்மை மற்றும் புராடக்ட் டிசைன் போன்ற படிப்புகள் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தப் பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களில் கிட்டத்தட்ட 30 சதவீதத்திற்கும் அதிகமானவை முழுமையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட படிப்புகளுக்குப் பதிலாக, 10,200 புதிய பாடப்பிரிவுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

செயற்கை நுண்ணறிவு (AI), ரோபோடிக்ஸ், செமிகண்டக்டர் இன்ஜினியரிங், டேட்டா இன்டெலிஜென்ஸ் மற்றும் மேம்பட்ட உற்பத்தித் தொழில்நுட்பம் (Advanced Manufacturing) போன்ற எதிர்காலத் தேவைகளுக்கான படிப்புகள் இதில் அடங்கும்.

நிஜ உலக மெக்கானிக்ஸ் மற்றும் கிமி ஐ இணைக்கும் பிரத்யேகப் படிப்புகளும் சில முன்னணிப் பல்கலைக்கழகங்களில் தொடங்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்கள் மட்டுமின்றி, பள்ளி அளவிலும் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. 6 வயது முதலே ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு கிமி கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாணவனும் ஆண்டுக்குக் குறிப்பிட்ட மணிநேரம் AI தொடர்பான பாடங்களைக் கற்க வேண்டும் என்ற விதி அமல்படுத்தப்பட்டுள்ளது.சிறிய வகுப்புகளில் ரோபோக்கள் மூலமும், உயர் வகுப்புகளில் கோடிங் மற்றும் மெஷின் லேர்னிங் (Machine Learning) மூலமும் கற்பிக்கப்படுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டம்: சீனாவில் இளைஞர்களிடையே நிலவும் 16%க்கும் அதிகமான வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைத்து, சந்தைக்குத் தேவையான திறன்களை வளர்ப்பது. 2030ஆம் ஆண்டுக்குள் உலகின் மிகச்சிறந்த கிமி வல்லரசு நாடாக மாற வேண்டும் என்ற சீனாவின் நீண்டகாலத் திட்டத்தின் ஒரு பகுதியே இக்கல்விப் புரட்சி.

சீனாவின் இத்தகைய அதிரடி மாற்றம், உலக நாடுகளின் ஒட்டுமொத்தக் கல்வி முறைக்கும் ஒரு புதிய பாதையைக் காட்டியுள்ளது.



# பணத்திற்காக நீட் தேர்வை மோசடியாக எழுதிய 4ம் ஆண்டு மருத்துவ மாணவர்கள்...

நீட் (NEET) மறுதேர்வில் பயோமெட்ரிக் வருகைப்பதிவு முறையையே ஏமாற்றி, பெரும் பணக்கார வீட்டு மாணவர்களுக்காக மருத்துவக் கல்லூரி (MBBS) மாணவர்கள் ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதிய அதிர்ச்சி ஊழல் அம்பலமாகியுள்ளது. பீகார் மாநிலம் லக்கிசராய் மாவட்ட காவல்துறையினரின் அதிரடி சோதனையில் இந்த 'எக்ஸாம் மாஃபியா நெட்வொர்க்' நெட்வொர்க் கண்டுபிடிக்கப்பட்டு, இதுவரை 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர.

நீட் தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமை (NTA) மூலம் பயோமெட்ரிக் சரிபார்ப்புக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனம், ஏற்கனவே கருப்பு பட்டியலில் (Blacklisted) வைக்கப்பட்ட ஒன்று என விசாரணையில் தெரியவந்துள்ளது.

பயோமெட்ரிக் சரிபார்ப்பு நிறுவனத்தின் ஊழியர்களுக்கு தலா ₹20,000 வரை லஞ்சம் கொடுக்கப்பட்டு, ஆள்மாறாட்டத்திற்கு அவர்கள் உடந்தையாக இருந்துள்ளனர்.

கோட்டா (Kota) போன்ற இடங்களில் நீட் பயிற்சி எடுத்து, தற்போது Gaya (AN-MMCH), Patna (PMCH) போன்ற அரசு மருத்துவக் கல்லூரிகளில் 4ஆம் ஆண்டு படிக்கும் மருத்துவ மாணவர்களே இந்த மாஃபியா நெட்வொர்க்கில் மூளையாகச் செயல்பட்டுள்ளனர்.

அசல் மாணவர்களின் குடும்பத்தினரிடம் இருந்து ஒரு சீட்டுக்கு ₹30 லட்சம் முதல் ₹40 லட்சம் வரை மாஃபியா கும்பல் வசூலித்துள்ளது. இதில் தேர்வு எழுத வரும் மருத்துவ மாணவர்களுக்கு (Solvers) ₹15 லட்சம் முதல் ₹20 லட்சம் வரை பங்கு தரப்பட்டுள்ளது.

இந்த மோசடியின் முக்கிய சூத்திரதாரியாகக் கருதப்படும் அர்பித் சிங் (Arpit Singh) மற்றும் பயோமெட்ரிக் குழுவுடன் இணைந்து செயல்பட்ட மயங்க் காஷ்யப் ஆகிய மருத்துவ மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாஃபியா நெட்வொர்க் பீகார், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட சுமார் 8 மாநிலங்களில் பரவியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

லக்கிசராய் எஸ்பி பிரேர்ணா குமார் தலைமையிலான போலீஸ் விசாரணையில் 18 பயோமெட்ரிக் ஊழியர்கள், 9 போலி (Dummy) மாணவர்கள் உட்பட 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீட் தேர்வு முறைகேடுகள், வினாத்தாள் கசிவு மற்றும் ஆள்மாறாட்டப் புகார்களை அடுத்து, ஒட்டுமொத்த விசாரணையும் மத்திய புலனாய்வு அமைப்பிடம் (CBI) ஒப்படைக்கப்பட்டுள்ளது.






# கட்சித் தலைவர்களின் புகைப்படங்களை வைப்பதில் திமுக, அதிமுக, தவெக வினர் இடையே தள்ளுமுள்ளு..

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் நகராட்சி மன்ற கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர்கள் மற்றும் கட்சித் தலைவர்களின் புகைப்படங்களை வைப்பதில் திமுக, அதிமுக மற்றும் தவெக (தமிழக வெற்றிக் கழகம்) கவுன்சிலர்களுக்கு இடையே கடுமையான தள்ளுமுள்ளு மற்றும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அரக்கோணம் நகராட்சி நகர மன்றத் தலைவர் லட்சுமிபாரி தலைமையில் கூட்டம் நடைபெற்ற போது, திமுக கவுன்சிலர்கள் சிலர் முன்னாள் முதல்வர் கருணாநிதி மற்றும் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் புகைப்படங்களை கூட்ட அரங்கிற்குள் வைக்கக் கொண்டு வந்தனர்.

இதற்கு அங்கு இருந்த அதிமுக மற்றும் தவெக கவுன்சிலர்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அதிமுகவில் இருந்து விலகி சமீபத்தில் தவெக கட்சியில் இணைந்த கவுன்சிலர் ஒருவர், கூட்ட அரங்கின் மையப்பகுதியில் தவெக தலைவர் விஜய்யின் புகைப்படத்தை வைக்க வேண்டும் என பிடிவாதம் பிடித்ததால் வாக்குவாதம் உச்சக்கட்டத்தை எட்டியது.

அதே வேளையில், அதிமுக கவுன்சிலர்களும் தங்களது கட்சித் தலைவர்களின் (பழனிசாமி) புகைப்படங்களை வைப்போம் எனப் போர்க்கொடி தூக்கினர்.

இந்தத் தள்ளுமுள்ளுவின் போது எதிர்பாராத விதமாக அரங்கில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. உடனே திமுகவினர் தவெகவைச் சுட்டிக்காட்டி 'தவெக ஆட்சி, இருண்ட ஆட்சி' என முழக்கமிட்டதால் அங்கு மேலும் பரபரப்பு ஏற்பட்டது.

கூட்டம் தொடங்குவதற்கு முன்பாக வழக்கத்திற்கு மாறாகத் தேசிய கீதம் முதலில் பாடப்பட்டதாகவும், பின்னர் திமுக கவுன்சிலர்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டதாகவும் மற்றுமொரு சர்ச்சை எழுந்தது.

தமிழ்நாட்டின் பல்வேறு நகராட்சி மற்றும் மாநகராட்சி கூட்டங்களிலும் (உதாரணமாக காஞ்சிபுரம் மற்றும் காரைக்குடி) சமீப நாட்களாகத் தங்கள் கட்சித் தலைவர்களின் படங்களை வைப்பது தொடர்பாகக் கவுன்சிலர்கள் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

Owned and Published by **KALAIVANI MURUGAN** from No.3/74, Road Street, Thimmanacherikuppam Post, Arapakkam, Vellore District, Tamilnadu-632517, Printed at Sekar Offset Printer, No.168/1, Big Street, Triplicane, Chenai - 600 005.
Editor: **G.MURUGAN** Cell: 9003006655

# செய்தியாளர்கள் தேவை !



தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட வாரியாக நிருபர்கள், போட்டோகிராபர்கள் தேவை.

**குறைந்தது ஓராண்டு அனுபவமுள்ள செய்தியாளர்கள் தேவை**

## விளம்பரக் கட்டண விவரம்

| அளவு | கலர் | கட்டணம்(ரூ.) |
|---|---|---|
| முழு பக்கம் | வண்ணத்தில் | ரூ. 10,000/- |
| அரை பக்கம் | வண்ணத்தில் | ரூ. 5,000/- |
| முழு பக்கம் | கருப்பு, வெள்ளை | ரூ. 5,000/- |
| அரை பக்கம் | கருப்பு, வெள்ளை | ரூ. 3,000/- |
| உள் அட்டை 2, 3 | வண்ணத்தில் | ரூ. 15,000/- |
| பின் அட்டை 4 | வண்ணத்தில் | ரூ. 20,000/- |

@BHOOTHAKANNADI_CHEITHIGAL

visit us: bhoothakannadi.com

bhoothakannadi_cheithigal

bhoothakannadi cheithigal

BHOOTHA KANNADI Tamil Monthly

# பூத கண்ணாடி

BHOOTHAKANNADI - Tamil Monthly,  PRGI Registeration No.148391(TNTAM/2018/75836)

# நடிகைகளுக்கே சவால்கள் அதிகம்!

**- நபா நடேஷ்**

தெலுங்கு மற்றும் கன்னட சினிமாவின் முன்னணி நடிகையாக திகழ்ந்து வருகிறார், நபா நடேஷ். மாடல் அழகியும் கூட. இவரது நடிப்பில் சமீபத்தில் திரைக்கு வந்து ஓடிக் கொண்டிருக்கும் 'நாக பந்தம்' என்ற புராண படமும் இவருக்கு நல்ல பெயரை வாங்கி தந்திருக்கிறது....

பேட்டி ஒன்றில் நடிகை நபா நடேஷ் கூறியது...

"என் சினிமா பயணம் எதிர்பாராதது. நான் சினிமாவுக்கு வருவேன் என்று கொஞ்சம் கூட கற்பனை செய்து பார்த்தது கிடையாது ஆனால் காலம் கொடுத்த அதிர்ஷ்டம், நான் சினிமாவில் இருக்கிறேன். சினிமாவில் நடிகர்களைவிட நடிகைகளுக்கே சவால்கள் அதிகம் என்றார்.





## கிராபிக்ஸ் பணியில்...

கந்தர் சி இயக்கத்தில் நயன்தாரா நடித்திருக்கும் மூக்குத்தி அம்மன் – 2' படம் ரூ.100 கோடி பட்ஜெட்டில் பிரமாண்டமாக உருவாகி வருகிறது. படத்தில் நிறைய காட்சிகளில் கிராபிக்ஸ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு அதிக காலம் ஆகும் என்பதால், இந்தப் படம் அடுத்த ஆண்டு (2027) தான் திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.